விலை ரூபா 2.00 ★ 12 பக்கங்கள்

Chundikuli ... Library

ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 ஆனி 23 ஷவ்வால் 18 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (7—7—85) இதழ் 147

## தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் சேவை

(கொழும்பு)

பூட்டானில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளை அடுத்தே தூத்துக்குடி—கொழும்பு கப்பல் சேவை ஆரம்பமாகும் என்று தெரியவருகிறது.

கடந்த வருடம் ஒக்டோபர் கடைசிவாரம் தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் சேவை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும்

[12-ம் பக்கம் பார்க்க]

### பூட்டான் மகாநாடு நாளை ஆரம்பம்

# தீவிரவாதக்குழுத் தலைவர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள்!

## அரசு வட்டாரம் தகவல்

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக பூட்டான் தலைநகரான திம்புவில் நாளை ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் இவர்களுக்குப் பதிலாக இவர்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் இலங்கை அரசு வட்டாரம் இத்தகவலைத் தெரிவிக்கிறது.**

இந்த பேச்சுவார்த்தைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக இந்த நான்கு விடுதலை இயக்கங்கள் முன்னர் தீர்மானித்திருந்தபோதிலும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிரதிநிதி ஒருவரின் தலையீட்டையடுத்து இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதென இக்குழுக்கள் தீர்மானித்துள்ளன.

இத்தீவிரவாதக் குழுக்களின் தலைவர்கள் தாங்கள் பூட்டான் பேச்சுவார்த்தையில் நேரில் கலந்து கொள்வதில்லையென்றும் தங்களின் பிரதிநிதிகளே அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

பூட்டான் பேச்சுவார்த்தையில் இலங்கை அரசதரப்புக் குழு தெரிவிக்கும் யோசனைகளைப் பரிசிலனை செய்யத்தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர்கள அறிவித்துள்ளார்கள்

இவ்வாறு அரச வட்டாரச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. [து]

### பேச்சுவார்த்தையின் முன்
### போர்நிறுத்தத்தின் பின்நடந்த சம்பவங்கள் ஆராயப்படும்

(சென்னை)

இனப்பிரச்சனை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வதற்கு முன்னர் போர் நிறுத்தத்துக்குப் பின் இலங்கைத் தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து பூட்டான்மாநாட்டில் ஆராயப்பட வேண்டுமென்று தீவிரவாதக்குழுக்கள் தெரிவித்துள்ளன.

மேலும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயுதப் போராட்டத்தில் இணைந்திருக்காத காரணத்தால் இவ்விடயம் குறித்து ஆராயப்படும் போதுகூட்டணி பங்குகொள்ளக் கூடாதெனத் தீவிரவாதக்குழுக்கள் கருதுகின்றனவாம்

அதேவேளையில் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழக (புளட்) தலைவர் திரு உமாமகேஸ்வரன் இம்மகாநாட்டில் கலந்து

(12-ம் பக்கம் பார்க்க)

### கொழும்பிலிருந்து புறப்பட்ட
## இரு இந்தியக்கப்பல்களை காணவில்லை

[கொழும்பு]

கொழும்புத் துறைமுகத்திலிருந்து சரக்கு ஏற்றிக்கொண்டு கல்கத்தா துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த இருகப்பல்கள் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

'நித்திய நாளுக்நித்தியராய்' என்ற இருகப்பல்களுமே காணாமல் போனவையாகும்.

நித்திய நாளுக் கப்பலில் 23 மாலுமிகள் சேவையிலிருந்தனராம்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 5,500 தொன் உப்பு ஏற்றிக்கொண்டு கடந்த ஜூன் மாதம் 18ம் திகதி கல்கத்தா நோக்கிப் புறப்பட்ட நித்திய நாளுக் ஜூன் 26ல் கல்கத்தா துறைமுகத்தை வந்து சேருமென்று எதிர்பார்க்கப் பட்டது. இக்கப்பல் புறப்படுவதற்கு முன்னரே நித்தியராம் சரக்குடன் புறப்பட்டுவிட்டதாம்.

காணமல் போன இருகப்பல்களையும் தேடும் முயற்சியில் இந்திய விமானப்படை விமானங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

(பெ. மா)

## பூட்டான் பேச்சுக்களைக் கண்டித்து ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இனப்பிரைச்சனை சம்பந்தமாக பூட்டான் தலைநகரான திம்புவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளைக் கண்டித்து நேற்று நீர்வேலியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

மாணவர்கள், பொதுமக்கள் உட்படப் பல்லாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

கோஷங்களை எழுப்பியவாறும், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் நீர்வேலியில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் கல்வியங்காடு திருநெல்வேலி வரையும் வந்து திரும்பவும் நீர்வேலி சென்று முடிவடைந்தது.

## ஊரடங்குநேரம் இரவு10மணிமுதல் காலை 4மணி வரை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில்

[12-ம் பக்கம் பார்க்க]

## தமிழீழ ராணுவம் பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

'தமிழீழ மக்களே பதவிப் பிரியர்களை-விளம்பர விரும்பி

( 2 ம் பக்கம் பார்க்க)

### இலங்கைக்கு
### உல்லாசப் பயணிகள் விசா இன்றிவரலாம்
# 36 நாடுகளுக்குச் சலுகை!

[கொழும்பு]

36 நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணிகள் விசா இன்றி இலங்கை வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை வரவிருக்கும் இந்த உல்லாசப் பிரயாணிகளுக்கு ஒரு மாதகாலம் இங்கு தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்படுமென்று குடிவரவு-குடியகல்வு அதிகாரி சி. டபிள்யு சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், கனடா, அயர்லாந்து, மலேசியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், டென்மார்க், பின்லாந்து, இந்தோனேஷியா, கொரியாகுடியரசு, இத்தாலி, நியூசிலாந்து பிலிப்பைன்ஸ், சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, ஆஸ்திரியா, பெல்ஜியம், ஜெர்மன் சமஷ்டிக்குடி

[10-ம் பக்கம் பார்க்க]

## விசாபெற்றால் மட்டுமே கிழக்கு பெர்லின் பயணம்

(மேற்குபெர்லின்)

கிழக்கு ஜெர்மன் தேசிய விமான சேவையான 'இன்டர் புளக்' விசாஇல்லாத இலங்கையர்களை கிழக்கு பெர்லினுக்கு இனிமேல் ஏற்றிச் செல்லமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு பெர்லின் செனட் பேச்சாளரான வின்பிரட் பெஸ்மட் இதனை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

கிழக்கு பெர்லினுள்ள ஸ்கூன்பெல்ட் விமானநிலையம் மூலமே இலங்கை உட்படப் பெரும்பான்மையான வெளிநாட்டவர்கள் மேற்கு பெர்லினுக்குள் சட்ட விரோதமாக நுழைகிறார்களாம்

கடந்த ஜனவரியிலிருந்து மே மாதத்திற்கிடையில் 17 ஆயி

(12-ம் பக்கம் பார்க்க)

### போர் நிறுத்தத்தை நீடிக்க
## போராளிகள் விரும்பவில்லை
### புதுடில்லியில் தலைவர்கள் அறிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையின் போர்நிறுத்த உடன்பாட்டை நீடிப்பதற்குத் தமிழீழவிடுதலைப்போராளிகள் விரும்பவில்லை என்றும் பன்னிரண்டு வார காலத்திற்குள் இனப்பிரச்சனைக்கு ஏதாவது ஒரு தீர்வு காணப்படவேண்டுமென்றும் புதுடில்லியில் தமிழீழ விடுதலைப் போராளிகள் குழுக்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்கவே பூட்டான் பேச்சுவார்த்தைகளில் தாங்கள் கலந்துகொள்ளச் செல்வதாகவும், பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள ஒப்புக்கொண்டிருப்பது, தங்கள் கோரிக்கை கைவிடப்பட்டதாகாது என்றும் இத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்

இதேவேளை இலங்கையின் போர்நிறுத்த உடன்பாட்டை ஆயுதப்படையினர் மீறி வருவதாகத் தமிழீழமக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு க. உமாமகேஸ்வரன் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

(12ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

C 70 யும், C 90 யும், Econd Power மோட்டார் சயிக்கிள் விற்பனைக்கு நியூ குகானந்தபவன், தட்டா தெரு சந்தி. யாழ்ப்பாணம். 4244

இரண்டு புளியமரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ எலியாஸ், மாரீசன்கூடல், இளவாலை. 4164

மாங்குளத்திலிருந்து துணுக்காய்க்குப் போகும் பிரதான வீதியில் 7ம் கட்டை வடகாட்டிலிருக்கும் 10 ஏக்கர் நெற்காணி, 10 ஏக்கர் தோட்டககாணி பிரயோசனத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சி கணேசமூர்த்தி, ''மூர்த்தி இல்லம்'', மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி. 4203

நல்ல நிலையிலுள்ள கலர் TV 17" [Phillips], Air Conditioner, K. D K. மின் விசிறி. Radio, Computer போன்ற மின் உபகரணப் பொருட்கள் உடன் விற்பனைக்கு உண்டு. பிற்பகல் 4 மணிக்குப் பின் பார்வையிடலாம். 22. கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 4261

உடுவில் மகளீர் பாடசாலைக்கு அண்மையில் தென்னை, மா மற்றும் பிரயோசனங்களுடன் 3½ பரப்புக்காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் அத்துடன் மானிப்பாயில் தென்னை, மா பிரயோசனங்களுடன் 12½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு நாட்களில் தொடர்பு கொள்ளவும். இல; 25, Ark Lane (ஆர்க்) உடுவில். 4262

நல்லூரில், கந்தசுவாமி கோவில் வீதியின் பின்புறமாக இரண்டு பரப்பு (Larchams) கட்டிடகாணித்துண்டு. இந்துமத வயோதிப தம்பதிகளுக்கு ஏற்றது. உடனடி விற்பனை. விலாசம்: திருமதி பதமாதேவி 351, கோவில் வீதி, நல்லூர். (4229)

கண்ணாடி அலுமாரி, வீட்டுக் கதவு, கடைக் கதவு புளியங்குவத்தடியில் 16 ஏக்கர் காணி, வங்களாவுடன் இரண்டு கிணறு உட்பட விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மணியம், 21/2 அம்மன் வீதி, கந்தர்மடம். 4264

நாயன்மார்கட்டு 51/2, அம்பாள் வீதியில் 4 பரப்பு வீடு கட்டக் கூடிய பனங் காணி விற்பனைக்குண்டு ஆ கனகரத்தினம், சுழிபுரம் கிழக்கு என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 4144

நாவலர் வீதி 211-ம் இலக்க 3 1/2 பரப்புக் காணியும் வீடும் மின்சாரம், தண்ணீர் வசதியுடனும் நாவலர்வீதியில் நாவலர் லேனில் 1 வது மேல் மாடி வீடு சகல வசதிகளுடனும், திருநெல்வேலி பணிக்கர் வளவு 2 1/2 பரப்புக் காணி வீட்டுடன் தண்ணீர்ப் பங்குடனும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு த. கிருஷ்ணமூர்த்தி, 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன் 24077 (4277)

5 மாதம் நிறைந்த முட்டையிடும் கோழி விற்பனைக்கு உண்டு. உடனே தொடர்பு கொள்க: திரு ப. சண்முகராஜா, பாடசாலை முன்பாக, தொண்டமானாறு. 4281

9 ஸ்ரீ மைனர் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 41 முன்னீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 4265

## விற்பனைக்கு

அழுத்தமான அம்மி, ஆட்டுக்கல், கல் உரல், திருகை, ஹோட்டலுக்குத்தேவையான பெரிய அளவிலான ஆட்டுக்கல் அனைத்தும் காங்கேசன்துறையில் கைதேர்ந்த தொழில் நுட்பக் கலைஞரால் கடையப்பட்டது தயாரித்து அளிப்போர்: சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. சாவகச்சேரியில்: சுல்தான் அப்துல்காதர் சகோதரர்கள், கண்டி வீதி, சாவகச்சேரி. 4059

Pioneer Amp இரு ஸ்பீக்கர்களுடன், அத்துடன் Sharp கசெற்டெக் விற்பனைக்கு. FM அன்ரனு இலவசம். எஸ். அமிர்தராஜா, 27, மணல்தரை லேன், கந்தர்மடம். 4270

அச்சகம் ஒன்று விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சி ஜி எஸ். அச்சகம், சித்தங்கேணி வீதி, வடலியடைப்பு. 4288

## மணப்பந்தல்

யாழ் இந்து உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த 38 வயதுடைய, 8 இல் செவ்வாய் தோஷமுள்ள, அரசாங்க உத்தியோகத்தர் மாதம் 1700 வருமானம் பெறும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 4268, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 4268

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த I C M A [ஒரு பகுதி] A/L சித்தியடைந்தவருமான 28 வயதுடைய பெண்ணிற்கு, Accountant, Engineer அல்லது வைத்தியராக தொழில் புரியும் மணமகன் 32 வயதுக்குட்பட்டவர் தேவை. வெளிநாட்டில் தொழில் புரிபவர் விரும்பத்தக்கது. சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல 4273, C/O ஈழநாடு. யாழ்ப்பாணம். 4273

33 வயதுக்கும் 37 வயதுக்கும் இடைப்பட்டவராகவும், நல்லொழுக்கமும் நல்ல கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் வேளாள குலத்தைச் சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். மணமகன் வங்கியில் கடமையாற்றும் 3000/- ரூபாவுக்குக் குறையாத சம்பளம் பெறுபவரும் மேற்கொண்டும் நல்லதோர் தொழில் ஸ்தாபனத்தின்மூலம் வருமான முடையவருமாவார். (தயவுசெய்து தரகர்கள் தொடர்பு முற்றாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.) மணமகள் பற்றிய விபரங்கள் இரகசியமாகப் பேணப்பட்டு மிகவும் கண்ணியத்துடன் பதிவுத் தபாலில் திருப்பி அனுப்பி வைக்கப்படும். மணமகளின் நிரந்தர வசிப்பிடம் யாழ்ப்பாணமாகவோ அல்லது அதன் சுற்றுப்புற இடங்களில் உள்ளதாகவோ இருத்தல் நன்று தொடர்பு: விளம்பர இல 4158, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (4158)

இந்து வேளாளர் இன அரசாங்க எழுதுவினைஞர் சேவையிலுள்ள 3 வயதான ஆணுக்கு ஓரளவு அழகுள்ள மணமகள் தேவை. சீதனம் வசதிக்கேற்ப கொடுக்கலாம். மணமகள் பொதுவாக மச்சம், மாமிசம் உண்பதில்லை சாதகக் குறிப்பு, உயரம், (விருப்பினால் புகைப்படம்) மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: (புகைப்படம் உடனே திருப்பி அனுப்பப்படும் விளம்பர இல. 4242, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4242

## விற்பனைக்கு

உடுவில் சுவாமி ஞானப்பிரகாசர் வீதியில் திரு. பி எல். பற்றிக், இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபருடைய வீட்டின் பின்புறமுள்ள 5 1/2 பரப்பு விஸ்தீரணமுள்ள கிணற்றோடு கூடிய வெறுங்காணி விற்பனைக்குண்டு. துண்டுகளாகவும் கொடுபடும். தொடர்பு: வண. ஜீ. ஏ. வின்ஸ்லோ, டச் வீதி, உடுவில். 4239

கால் நடைகளுக்கு உகந்த பெக்கூட்ரின் பவுடர் (Pecutrin pd ) மொத்த விலை- 7-50. சில்லறை விலை - 8-50. தொடர்புகொள்க: M G M. Forage Stores, 781, K K S Rd and 208, 1st Cross Street, Jaffna. 4289

## தேவை

றேடியோ திருத்துபவர் தேவை. நேரில் காலை 8 மணி முதல் 5 மணிக்குள் வரலாம். ரெலிகோணர், மொடர்ன் மாக்கற், சாவகச்சேரி. 4159

## பயிற்சி வகுப்பு

மருத்துவ தாதி பயிற்சி (Nurse Training Diploma Course) ஆரப்பமாகவுள்ளது G. C. E. O/L, A/L சித்தியடைந்தவர்கள் 20-7-85 முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி. ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 4206

## FOR SALE

86 ஸ்ரீ தொடரிலக்க Bajaj Chetak ஸ்கூட்டர் [1983 Signal Model] நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கின்வ் அரியரத்தினம், பொந்தி ஒழுங்கை, பண்டத்தரிப்பு. 4282

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna A/L 87 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ், புதிய வகுப்புகள் ஆரம்பம். 08 07-85 [திங்கள்] காலை வகுப்பு திங். புதன், வெள்ளி 7-15 a. m. மாலை வகுப்பு திங், புதன் 4 00 P M· சனி, ஞாயிறு 3-00 p m. ஆரம்பம் 13-07-85 3-00 p. m. 4245

## வாடகைக்கு

திருநெல்வேலி Farm School க்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய மூன்று அறைகளுள்ள சிறிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: கே. இராசசுந்தரம், (Opp Y.M H A). கொக்குவில் வீதி. 4182

## கல்வி

Radio and Electronic Engineering சனி, ஞாயிறு காலை வகுப்புக்கள், ஆண், பெண் ஆகிய இருசாராரும் பயிலலாம். 11-7-85 காலை 9-00மணிக்கு பதிவும் ஆரம்ப வகுப்பும் நடைபெறும். முன்கூட்டியே விசாரணை செய்யவும். பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை யாழ்ப்பாணம். 4240

## தேவை

பிரப்பம் தட்டிகள் தேவை. விலைவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: த. பெ 77, மில்க்வைற், யாழ்ப்பாணம். 4284

**A/L 87**

சனி, ஞாயிறு. வகுப்பு

7-15: பிரயோககணிதம்
8-30: தூயகணிதம்

**ஆரம்பம்: யூலை 14**

**Ravimohan**
JAFFNA
[வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்]

---

**வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஓர் நற்செய்தி**

கொழும்பில் தங்கிக் கருமமாற்ற, நம்பிக்கை, பாதுகாப்பு, வசதி, குறைந்த கட்டணம் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்ட தூய்மையான தங்குமிடம்.

★ பாஸ்போட், பிரயாண ஒழுங்குகளும் செய்து தருபவர்கள்:

**நியூ ஹை ஸ்ரார் ஹோட்டல்,**
246, காலிவீதி, வெள்ளவத்தை. 4278

---

**விக்னு டியூசன் சென்றர்**

52, ஸ்ராலி வீதி, யாழ்நகர்.

(கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

**A/L 86, 87 ஆண்டிற்கான** சனி, ஞாயிறு வகுப்புக்கள்

**ஆரம்பம்: 13—07—85**
**காலை 11–00 மணி.**

குறிப்பு-- கலை, வர்த்தக வகுப்புக்கள் இந் நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்றன. 4280

---

## 31-ம் நாள் நினைவுதினம்

உயர்திரு
வேலாயுதர் சின்னட்டியர் நடராசா



தோற்றம்: 10-03-1921
மறைவு: 08-06-1985
அந்தியேட்டி கிரியை: 07-07-1985 (கீரிமலை புனிதஸ்தலம்)

பிரபல சுருட்டு தொழிலதிபர், வர்த்தகர் திருநெல்வேலி, கம்பனி. (V S N.)

சபிண்டீகரண கிரியையும் மகேஸ்வர பூசையும் } 08—07—1985 (அன்னாரது இல்லம்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.
சாந்தி சாந்தி சாந்தி.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
26, 26/1, திருநெல்வேலி (சிவன்) புதுவீதி, யாழ்ப்பாணம். 4152

---

## இரண்டாவது நினைவஞ்சலி

திரு. ஆர். செல்லையா



தோற்றம்: 12–10–1905
மறைவு: 12–07–1983
திதி: 08–07–1985

உங்கள் ஆத்ம சாந்தியை நினைவு கூரும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்.

திருமதி ஏ செல்லையா,
மகாத்மாகாந்த வீட்,
யாழ்ப்பாணம். 4193

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# செவ்வாயில் மனிதன் காலடி வைப்பது சாத்தியமா?

எஸ். பகவத்சிங்

சரித்திரத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே விஞ்ஞானிகளுக்கு செவ்வாய் ஒரு மர்மம் நிறைந்த கிரகமாகக் காட்சியளித்தது. அதன் செந்நிறத் தோற்றம், இடையிடையே தோன்றி மறையும் பச்சைநிற பரப்பும், துருவங்களில்காணப்படும் வெள்ளி போன்ற பனிப் படர்களும் விஞ்ஞானிகளின் மூளையை வெகுவாகக் குழப்பி விட்டது.

''சரி இதில் என்ன தான் அப்படி மர்மம் இருக்கிறது'' என்று 19ம் நூற்றாண்டின் இத்தாலிய விஞ்ஞானி கியோவானி-கிச்சாபெரலி என்பவர் தமது தொலைநோக்கியைக் கொண்டு நாட்கணக்காக செவ்வாயை ஆராய்ந்து அதில் பல கால்வாய்கள் காணப்படுகின்றன என்றும், அவற்றில் முன்பு ஒரு காலத்தில் நீர் இருந்திருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

''சரி அந்தக் கால்வாய்கள் இயற்கையானவையா, அல்லது செயற்கையாக வெட்டப்பட்டதா?'' என்றகேள்விக்கு அவரால் பதிலளிக்க முடியாமல் போகவே விஞ்ஞானக்கற்பனை எழுத்தாளர்கள் தமது அதீத கற்பனையில் அங்கு மனிதனை விட அறிவு கூடிய உயிரினங்கள் வசிக்கின்றன என்றும் அவை என்றேனும் ஒருநாள் பூமி மீது படையெடுக்கலாம் என்றும் எழுதினார்கள்.

இவர்களில் பிரசித்தி பெற்றவர் எச். ஜி. வெல்ஸ் என்னும் பிரித்தானியர். இவருடைய ''உலகங்களுக்கிடையிலான போர்'' என்னும் நூல் செவ்வாய் கிரக வாசிகள் புவி மீது படையெடுப்பதாகக் கொண்டு எழுதப்பட்டது. இதைப் படித்துவிட்டுப் பலநியூயோர்க் நகரமக்கள் மலைகளில் மீது ஒளிந்து கொண்ட தாகக்கூட கதைகளுண்டு.

## விண்கலங்களின் தகவல்கள்

எவ்வாறாயினும் எழுபதுகளின் முற்பகுதியில் அனுப்பப்பட்ட ரஷ்ய, அமெரிக்க விண்கலங்கள் செவ்வாயைப்பற்றிய பல தகவல்களை எமக்குத் தந்துள்ளன. செவ்வாய் சூரியனிலிருந்து ஏறக்குறைய 228 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. அதன் அளவு ஏறக்குறைய பூமியின் அளவைப் போல் அரை மடங்காகும். அது தன்னைத்தானே ஒருமுறை சுற்றுவதற்கு 24 . 623 மணித்தியாலங்கள் எடுக்கின்றது. (புவி 23 . 934 மணித்தியாலம்).

செவ்வாயின் இந்த சுழற்சி புவியின் சுழற்சியோடு ஒத்திருப்பதால்தான் அங்கு பருவ காலங்கள் ஏற்படுகின்றன இப்பருவ காலங்களின் மாறுகையினால்தான் அந்த காலத்துக்குக் காலம் செந்நிறமும், பச்சை நிறமும், கருநிற மேகங்களும் மாறி மாறித் தெரிகின்றன.

செவ்வாயை ஆராய முதன் முதலில் வெற்றிகரமாக அனுப்பப்பட்ட விண்கலம் மரீனர் 4 ஆகும். இது 1964-ம் ஆண்டு டிசெம்பர் 28 இல் அமெரிக்காவினால் அனுப்பப்பட்டது. செவ்வாய் கிரகத்தின் பல்வேறு மேற்பரப்புக்களைப் பற்றி சுமார் 20 புகைப்படங்களை 'மைக்ரோ அலை'' களாக புவிக்கு அனுப்பியது. இதன் மூலம் முதல்முறையாக செவ்வாய் கிரகத்தின் மேற்பகுதியை விஞ்ஞானிகளால் தெளிவாகப் பார்க்கக் கூடியதாகவிருந்தது. இதைத்தொடர்ந்து மரீனர் 6 மரீனர் 7 என்னும் விண்கலங்கள் செவ்வாய்க்கு அனுப்பப்பட்டன. இவைகள் யாவும் செவ்வாயைச் சுற்றி வந்தனவே தவிர செவ்வாயின் மேற்பரப்பில் ஒருபோதும் இறங்கவில்லை.

## ரஷ்ய விண்கலம்

செவ்வாயைப் பற்றி விரிவாக ஆராய வேண்டுமாயின் விண்கலத்தை அதன் மேற்பரப்பில் இறக்கவேண்டும். இந்த நோக்கத்திற்காக 1971-ம் ஆண்டு நடுப்பகுதியில் ரஷ்யாவினால் மார்ஸ் 2, மார்ஸ் 3 என்னும் இரு விண்கலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அனுப்பப்பட்டன. இவற்றின் தாய்க்கலத்திலிருந்து இரண்டு சேய்க்கலங்கள் செவ்வாயின் தரையை நோக்கிமெதுவாக இறங்க ஆரம்பித்தன ஆனால் இக்காலப்பகுதியில் செவ்வாயில் கடும் ''தூசுப்புயல்'' (Dust Storm) வீசிக்கொண்டிருந்தது. இதைக் கண்டு பிடிக்க ரஷ்ய விஞ்ஞானிகளால் முடியாமல் போய்விட்டது விளைவு இருசேய்க்கலங்களும் சேதத்திற்குள்ளாகி ஆராய்ச்சிக்குத் தகுதியற்றுப்போயின.

## வைக்கிங்-1 தகவல்கள்

இந்நிகழ்வுக்குப் பின் 1975ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி 'வைக்கிங்-1' என்னும் விண்கலம் அமெரிக்காவால் அனுப்பப்பட்டது இவ்விண்கலம் அங்கு வெற்றிகரமாகத் தரையிறங்கி செவ்வாயின் மேற்பரப்பை ஆராயத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து 'வைக்கிங்-2' உம் அனுப்பப்பட்டது

'வைக்கிங் கலங்களின் தகவல்களிலிருந்து செவ்வாயின் வளி மண்டலம் புவியின் வளிமண்டலத்தை விட நூறுமடங்கு அடர்த்தி குறைந்தது என்று புலனாகியது அதன் வளிமண்டலத்தின் பெரும் பகுதி காபனீரொட்சைட்டு வாயு. ஒட்சிசன் மிக மிகச் சிறிய அளவிலேயே உள்ளது அதன் துருவங்களில் காணப்படும் பனிப்படாவுகள் நீரினால் ஆனவையல்ல, அவை காபனீரொட்சைட்டு வாயுவின் திண்ம நிலையே என்பன போன்ற தகவல்கள் எமக்குக் கிடைத்தன.

செவ்வாயின் மேற்பரப்பின் வெப்பநிலை மிகமிகக் குறைவாகும். கோடை காலத்தின் நடுப்பகலில் கூட அதன் மத்திய கோட்டினை வெப்பநிலை 10°Cயை விட உயர்வதில்லை. இதனால் அங்கு பரிணாம வளர்ச்சியடைந்த உயிரினங்களின் வாழ்க்கை சாத்தியமில்லை எனக் கருதப்படுகின்றது. அத்துடன் செவ்வாயின் மண்ணில் சேதனவுறுப்புப் பதார்த்தங்கள் காணப்படவில்லை, இவையும் அங்கு உயிரின வாழ்க்கை இல்லை என்பதையே கூறுகின்றன. ஏனெனில் ''அசேதனவுறுப்பு உயிரினவாழ்க்கை'' யானது சாத்தியமில்லாததொன்றாகும்.

எனினும் 'வைக்கிங்களால்' ஆராயப்பட்டது, செவ்வாயின் ஒரு சிறுபகுதியேயாகும். எனவே அதன் ஏனைய பகுதிகளில் பக்டீரியா, பங்கசு போன்ற எளிய உயிரினங்கள் வாழக்கூடும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். செவ்வாயில் உயிரின வாழ்க்கையைப் பற்றியும் அதன் தன்மையைப் பற்றியும் விரிவாக ஆராய்வதற்கு அங்கு ஆளுள்ள விண்கலங்களை அனுப்புவதே சாலச் சிறந்ததாகும். இவ் ஆளுள்ள விண்கலங்களை அனுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகளை இனி ஆராய்வோம்

## ஆளுள்ளகலங்கள்

## ● செவ்வாய் பயணத்துக்கு விண்வெளியில் குடியிருப்புகள்!

செவ்வாய்க்கு ஆளுள்ள கலங்களை அனுப்பி அவை திரும்பி வருவதற்கு ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு மேலான காலப்பகுதிதேவைப்படும். இந்த நீண்ட காலப் பகுதியில் விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உணவு, ஒட்சிசன் போன்ற ''அத்தியாவசிய உயிர் வாழ்க்கை'' தேவைகளை வழங்குவது என்பது கடினமானகாரியம் தான். எனினும் விஞ்ஞானிகள் மனிதக்கழிவுகளை ''சுழற்சி முறையில் மீள் பாவிக்கும்'' திட்டம் ஒன்று பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். இல்லாவிடில் விண்வெளி வீரர்கள் செல்லும் கலத்தின் களஞ்சியப்பகுதியினளவு மிகமிகப்பெரிதாகிவிடும். இதைத்தவிர இன்னும் பல பிரச்சனைகள் மனிதனை செவ்வாய்க்கு அனுப்புவதில் எதிர்கொள்ளப்படுகின்றன.

புவிச் சூழலில் வாழ்ந்து பழக்கப்பட்ட விண்வெளி வீரர்கள் ஒரு வருடத்திற்கும் மேலான காலப்பகுதியில் தொடர்ச்சியாக விண்வெளியில் இருப்பார்களாயின் அவர்களது உடல், உள வலிமைகள் பாதிப்படைய நேரிடலாம்

இவர்களது விண்கலம் எவ்வேளையிலாவது பழுதடைந்து திரும்பிவர முடியாத நிலை ஏற்படுமாயின் நிச்சயமாக இவர்களைக் காப்பாற்ற முடியாது. ஆளில்லாவிண்கலங்கள் எதேச்சையாக விபத்துக்குள்ளானால் (மார்ஸ் 2, மார்ஸ் 3க்கு ஏற்பட்டது போல) அவை பொருளாதார ரீதியில் நட்டத்தை ஏற்படுத்துமே தவிர விஞ்ஞானிகளையோ, மக்களையோ உளவியல் ரீதியாகப் பாதிக்காது ஆனால் ''மூன்று விண்வெளி வீரர்கள் பூமியிலிருந்து பல மில்லியன் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் எவ்வித உதவியுமின்றி உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள்'' என்னும் செய்தியானது விஞ்ஞானிகளையும் மக்களையும் உளவியல் ரீதியாக வெகுவாகப்பாதிக்கும்.

## விண்வெளிக் குடியிருப்பு

எனவே செவ்வாய்ப் பயணத்தை விஞ்ஞானிகள் வேறொரு முறையில் வடிவமைத்துள்ளார்கள். இத்திட்டம் என்னவெனில் முதலில் விண்வெளியில் ''விண்வெளிக் குடியிருப்புக்களை'' அமைப்பது. அக்குடியிருப்புக்கள் சிறிய அணுசக்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், ஆய்வுகூடங்கள், களஞ்சியங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கும். அத்துடன் புவிக்கு அடிக்கடி சென்று வருவதற்குச் சிறிய விண்கலங்களையும் அவை தரித்து நிற்பதற்குரிய தளங்களையும் கொண்டிருக்கும் இக்குடியிருப்புக்களில் விஞ்ஞானிகளும், தொழில்நுட்பவியலாளர்களும், விண்வெளிவீரர்களும் முதலில் குடியேறுவார்கள்.

அவர்கள் அங்கு தொடர்ந்து வசிக்கும் போது அவர்களது வாழ்க்கை முறை புவிச் சூழலின் வாழ்க்கை முறையிலிருந்து பெருமளவு வேறுபட்டிருக்கும். இதனால் இவர்களை செவ்வாய்க்கு அனுப்புவது சுலபமாகும். இதைத்தவிர இன்னும் பல காரணங்களுண்டு

முதலாவது, ''குடியிருப்புக்களில்'' வசிக்கும் விண்வெளி

(10-ம் பக்கம் பார்க்க)

# இருவரும் ஒருவரே!

58 வயதடைந்த ஒய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் மட்டக்களப்புப் பெரியாஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட முன்னரே மரணமானார், கிருமிநாசினியைச் சாராயம் என்று மாறிக் குடித்ததால் உண்டான மரணம் அது. விசாரணையில் அது தவறுதலாக ஏற்பட்ட விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தற்கொலைக்குக் கிருமிநாசினி கைக்கொட்டுவது சாதாரணம். ஆனால் நாம் குறிப்பிடும் செய்தி தற்கொலை அல்ல என்பது தீர்ப்பு.

நான்கு பிள்ளைகளுக்குத் தகப்பனான ஆசிரியர் கச்சேரியில் ஒய்வூதியம் எடுத்து வந்தபின் மது அருந்தி நித்திரையில் அமர்ந்தார். மாலை ஐந்து மணிக்கு விழித்தெழுந்ததும், இரண்டாவது தடவை சாராயம் என்று கிருமிநாசினியை அருந்தியதாக மனைவிக்கு முறைப்பட்டார் இரண்டின் மணமும் அடித்ததாலே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல நேரிட்டது.

ஆசிரியர் மது அருந்தும் பழக்கத்தை விசேடமாகக் கண்டிப்பது அறியாமை. அறிவால் திருந்தவேண்டியது ஒவ்வொருவரின் கடமை. அது தவறினால் அனுபவத்தால் திருந்த வேண்டியது கட்டாயமாகிறது.

மதுவுக்கு அடிமையானவர் அனுபவத்தால் திருந்துவது அரிதினும் அரிது.

நாம் குறிப்பிட்ட சம்பவம் தவறால் ஏற்படவில்லை. கசிப்பு, கள்ளு, சாராயம், கஞ்சா, ஹீரோயின் போன்ற போதைவஸ்துக்கள் பொலிடோல் போல நஞ்சென்று கொள்ளவேண்டும்.

மது மட்டாகக் குடிப்பவர்கள் பற்றி அபாயம் இல்லை மட்டு எது, எங்கு, எவ்வாறு என்பன மதிக்க முடியாத காரியம். சோவியத் ரஷ்யாவிலேயே மது இளஞ்சமுதாயத்தைக் கெடுத்துவருவதாகக் காணப்படுவதால் இளந்தலைவர்கள் அதனைத்தடைசெய்ய முன்வந்திருக்கின்றனர்.

''நஞ்சுண்பவர் கள்ளுண்பவர்'' என்ற தமிழ் மறை நினைவில் இருக்கட்டும்.

# குரோமிக்கோவும் மற்றவர்களும்

சோவியத் ஒன்றியத்தின் புதிய அதிபர் அந்ரீகுரோமிக்கோ தமது30வதுவயதில் வாஷிங்டனில் சோவியத் தூதராக நியமனம் பெற்றார் ஐ. நா. ஸ்தாபனத்தை வரைவதில் பெரும் பங்காற்றினார். அப்பொழுது இன்றைய அமெரிக்க அதிபர் றொனல்ட் றீகன் ஹொலிவூட்டில நடித்துக் கொண்டிருந்தார். பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் மிக்கேல் கோபர்ச்சோவ் 14 வயதுப் பள்ளிக்கூடப் பையனாக இருந்தார்.

இதுவரை கொழுந்து விட்டெரிந்த நெருப்புகள் யாவும் சற்றுத் தாகம் தணிந்து தற்போது நீறுபூத்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

இந்த வேளையில்—

வருமா? வராதா? எப்போது வருமாம்? என்ற நிலையில் சில காலமாக சர்ச்சைக்குரியவிடயமாக இருந்துவந்த எமது யாழ்ப்பாணத்திற்கான தீயணைப்பு சாதனம் கடைசியில் உரிய இடத்திற்கே வந்துவிட்டது.

அண்மையில் பல தடைகளையும் தாண்டி யாழ், நகரை வந்தடைந்த தீயணைப்புச்சாதன வண்டி தற்போது நல்லூர் இந்து விடுதி வளவில் நிலை கொண்டுள்ளது. இந்த தீயணைப்புச் சாதனத்தின் தேவையினை உணர்ந்த எவரும் இச்சாதனத்தின் தன்மைகளைப் பற்றி விபரமாக அறிய வே விரும்புவர் இதனைக் கருத்திற் கொண்டே இச்சாதனத்தினைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவந்து சேர்த்தகொழும்பு தீயணைப்புச் சேவை இலாகாவைச் சேர்ந்த பொறுப்பதிகாரிகளான திரு கே. திருநாவுக்கரசு, திரு. எஸ். ஆர் மகாதேவா, திரு ரி தங்கராஜா ஆகியோரிடம் இது பற்றிய விபரங்களை அறிந்து கொண்டோம்.

சென்றவாரம் இங்கு தங்கி நின்று இந்த தீயணைப்பு சாதனத்தைப் பராமரித்தல். அதற்கு மேலும் தேவையாகவுள்ளன, ஒரு தீயணைப்புப் படைப்பிரிவினை எவ்வாறு அமைக்கவேண்டும் என்பது குறித்த ஆலோசனைகளையெல்லாம் இவர்கள் மாநகரசபையினருக்கு வழங்கியுள்ளனர்.

**இங்கிலாந்தில் உருவானது**

கனேடிய அரசினால் அன்பளிப்பாகவே வழங்கப்பட்ட இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட இந்த தீயணைப்பு சாதனம் சுமார் 19 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தது. கொழும்பிலுள்ள தீயணைப்பு சேவை இலாகா பிரதம பொறுப்பதிகாரியான திரு. எம். ஐ. டி. எஸ். சில்வாவின் சிபார்சின் பேரிலேயே இந்த வகையான சாதனம் தெரிவு செய்யப்பட்டது.

400 கலன் தண்ணீரை இந்த சாதனத்தின் தாங்கி கொள்ளக்கூடியது. இதனுடன் 30 அடி வரை உயர்த்தக்கூடிய ஏணியும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் தீயணைத்தலின்போது உபயோகிக்கப்படும் பிராணவாயு சிலிண்டர் தொகுதிகள் இரண்டும் இதனுடன் உள்ளன. சுமார் 100 இறுத்தல் விசையுடன் 100 அடி தூரம் வரை தண்ணீரைப் பாய்ச்ச வல்லது இந்த தீயணைப்பு சாதனம் தாங்கியிலிருந்து இரண்டு வெளியேற்று வாயில்கள் மூலமாக நீரானது வெளியேற்றப் படலாம். தேவைப்படின் இதனை இரட்டிப்பாக்கலாம்.

பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் குழாய் நீர் லைன்கள் நிலத்தினடியில் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும் அத்தகைய லைன்கள் இருப்பின் நன்று. அங்ஙனமில்லாவிடில் நகரின்முக்கியமானஇடங்களில் Fire hydrants அல்லது தீயணைப்பு நீர் வழங்கிகளான பாரிய நீர்த்தொட்டிகள் நிலத்திற்கடியில் அமைக்கப்பட்டு அவை நீர்க்குழாய்களோடு தொடுக்கப் பட்டிருத்தலவசியம்.



# நீறுபூத்த பூமியில் ஒரு தீயணைக்கும் இயந்திரம்

★ விஜயன்

"இச்சாதனம் மட்டுமே எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிய தீவிபத்துகளைச் சமாளித்துவிடுமா?" எனக் கேட்டபோது திரு. திருநாவுக்கரசு "இந்த ஒருசிறுதொகுதியினைக் கொண்டு மட்டும் பெருந்தீவிபத்துகளைச் சமாளிக்கமுடியாது அத்துடன் இத்தொகுதியினைச் சரிவரஉபயோகிப்பதற்குக் கூட இன்னும் ஆகவேண்டியன பல உள்ளன. இதற்கான சிபார்சுகளை நாம் தற்போது வழங்கியுள்ளோம்", என்றார்.

**400 கலன் நீர் கொள்ளக்கூடியது**

மேலும் இது பற்றிய விபரங்களைக்கேட்டபோது அவர் கூறியதாவது; தற்போது தருவிக்

**நன்னீர் குளங்களை நாடலாம்**

இதற்கு இன்னொரு வழியும் சொன்னார் அவர். நகரை அண்டிய நன்னீர் குளங்களின் அருகில் பன்னிரண்டு அடி நீளம், அகலம் கொண்டதும் பன்னிரண்டு தொன் எடையுள்ள வாகனத்தைத் தாங்கக் கூடியதுமான மேடைகளை அமைத்து வைத்திருந்தால் தீயணைப்பு வாகனம் தேவையான வேளைகளில் இக் குளங்களில் இருந்தும் நீர் பெறக் கூடியதாய் இருக்கும் என்றார். இப்படியான மேடைகளின் மேல் பதினைந்து அடி உயரம் வரை எதுவித தடையும் இல்லாதிருந்தாலே வாகனம் நிற்கக் கூடியதாக

## 400 கலன் நீரை

## 100 அடிக்குப்

## பாய்ச்சக் கூடியது

கப்பட்ட சாதனம் 400 கலன் தண்ணீரை மட்டும் கொள்ளக் கூடியது. இது ஒரு சிறு தீவிபத்தினையே கட்டுப்படுத்தக்கூடியது. ஆனால் பெரிய தீவிபத்துகளை கட்டுப்படுத்தவேண்டுமானால் இதற்கு குறைந்தது இன்னும் 2000 கலன் நீர்கொள்ளக் கூடிய இரு பவுசர்களும் உடனிருக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல கொழும்பில் தேவையான நேரத்தில்நீரைப்

இருக்குமென்றும் அவர் கூறினார்.

இந்த தீயணைக்கும் சேவை அதிகாரிகள் ஒவ்வொரு தீயணைப்புச் சேவைப் பிரிவிலும் இருக்கவேண்டிய பல்வேறு அங்கத்தவர்கள் குறித்தும் சிறு விளக்கம் தந்தனர்.

**படை அமைப்பு**

தற்போது இவர்களாற் சிபா

ரிசு செய்யப்பட்டுள்ள தீயணைப்புச் சேவைப் பிரிவில் மொத்தம் 43 பேர்வரை இருப்பர். இவர்கள் மூன்று குழுவாகப் பிரிந்து மூன்று மாற்று வேலை நேரங்களில் இருபத்து நான்கு மணிநேரமும் மாறி மாறிச் சேவையிலிருப்பர். ஒவ்வொரு குழுவிலும் ஒரு பொறுப்பதிகாரியும், தலைவர், சாரதி, ஐந்து தீயணைப்பாளர்கள் இரு றிசேர்வ் ஊழியர்கள் ஆகியோரும் அங்கம் வகிப்பர். இது தவிர ஒரு தொலைபேசி இயக்குனரும் தொடர்ந்து சேவையிலிருப்பார். இவர் அவசர அழைப்புக்களுக்குப் பொறுப்பானவர். ஒரு குழுவில் குறைந்தது பன்னிரண்டு பேர் அடங்குவர். இம் மூன்று குழுக்களும் ஒரு பிரதம பொறுப் பதிகாரியின் கீழேயே இயங்கும்.

மேலும் தீ தடுப்பு உத்தியோகத்தர் (Fire Prevention Officer) ஒருவரும் இந்த தீயணைப்புச் சேவைப் பிரிவில் இருப்பர். எதிர் காலத்தில் இந்த உத்தியோகத்தர் பல விடயங்களுக்குப் பொறுப்பாகவிருப்பார். அதாவது இந்த உத்தியோகத்தரது பரிசீலனையினதும் சிபாரிசுகளின் பேரிலுமே புதிய தொழிற்சாலைகள், படமாளிகைகள், ஹொட்டல்கள், எரிபொருள் விற்பனை நிலையங்கள் போன்றவற்றிற்கு அரசாங்க அனுமதி வழங்கப்படும்.

பிரதானமாக தீ இலகுவில் பற்றக் கூடிய நிலையங்கள் யாவும் இவரது அனுமதியுடனும் ஆலோசனை யுடனுமே திறக்கப்படல் வேண்டும்.

ஒரு நிறுவனம் தீவிபத்தினின்றும் பாதுகாப் பானதா? அதன் மின் கம்பிகள் சீராக அமைக்கப் பட்டுள்ளனவா? தீ பிடித்தாலும் அதனைக் கட்டுப் படுத்தும் வசதிகள் உண்டா? என்பன போன்ற விடயங்களையெல்லாம் பரிசோதித்த பின்னர் தான் இவர் தீ பாதுகாப்பு உறுதிப் பத்திரத்தினை (Fire Certificate) வழங்குவார். அதன் பேரிலேயே அரசாங்க அனுமதியும் வழங்கப்படும்.

**பயிற்சி**

கூடிய விரைவில் யாழ் தீயணைக்கும் சேவைப் பிரிவுக்கென பலர் பயிற்சிக்குத்

[10-ம் பக்கம் பார்க்க]

## கழிவிலே காசு

கழிவிலே காசு அழிவிலே ஆக்கம். குப்பையிலே கோடி பொன். இவ்வாறெல்லாம் ஆச்சரியமாகக் கூறிக்கொள்ளும் வகையில் மரங்களில் இலைகள் பழுத்துப் பொன்னிறத்தனவாய்ப் பொல பொல என்று விழுந்து குவிகின்றன. எங்கள் மூதாதையர் தங்கள் வளவுகளில் ஒருமூலையில் அகலமான குப்பைத் தொட்டி கட்டி அதற்குள் குப்பை கூளங்கள் மாட்டுச் சாணங்கள் யாவற்றையும் இட்டுச் சேமித்து வருடந் தோறும் வயல்களிற் பயன்படுத்தி வந்தார்கள்.

"வாடி யுதிர்ந்த மலரைக் கண்டு வாழ்வை நம்பவா," என்று கேட்டவருக்கு, "உதிர்ந்த இலைகள் உரமாகும்" என்று சுத்தானந்த பாரதியார் அவர்கள் பாடி விளக்கி யுள்ளார். இது விஞ்ஞான நுட்பமுமாகும்.

எங்கள் வறண்ட பிரதேசத்தில் நமக்கு வாழ்வளிப்பன தாவரங்கள். இத் தாவர சங்கமங்கள் இறைவன் தந்தருளிய அருட் கொடை. தாவரங்கள் ஆண்டு தோறும் உபகரிக்கும் உபகரிப்புகளுள் உதிர்க்கும் இலைகள் சருகுகளும் ஒரு சில. இவற்றைக் குப்பை எனக் கூட்டி ஒதுக்கி அப்புறப்படுத்தி அகற்றி விட்டு இரசாயன உரக் கலவைகளை நம்பி விவசாயம் செய்ய முயல்வது. புத்திசாலித்தனமாகாது. தரமான பசளை தாவரக் கழிவுகள். இவற்றைப் பயன்படுத்தி விளைவு செய்து காசு தேடுதல் முறையானதாகும்.

"மின்னவைத்"

# இவ்வாரம் உங்கள் பலன்

வாரபலன்: மாதம்- ஆனி திகதி-23(1985-07-07)
ஞாயிறு - திதி - பஞ்சமி பிற்பகல் வரை
நக்ஷத்திரம்-சதயம் பிற்பகல் வரை

**மேடம்**

ஏக்கத்தின் சாயல் நிழல் போலத் தொடரும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வேதனையைத் தரும் ஆத்திர உணர்ச்சியை அடக்கவும். சிறு பிணிக்கும் இடமுண்டு.

**இடபம்**

வாகனச் சொந்தக்காரர்களுக்கு வாருமானம் பெருகும் ஆசிரியர்கள் பணி சிறப்பாக இருக்கும். சிலருக்கு ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் ஏற்படும். ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பங்களை இழக்க நேரிடும். உள்ளத்தில் உறுதி தேவை.

**மிதுனம்**

செய்தொழில் மூலமும், புதியவழிகள் மூலமும் பொருள் வரவுக்கு இடமுண்டு. சிலருக்குப் பதவி உயர்வுக்கும் இடம் ஏற்படலாம். வாழ்வில் ஒளி வீசும். முதியவர் ஒருவர் நல் வழிகாட்டுவார். பிள்ளையொன்றின் கல்வி விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**கடகம்**

ஆசை அலைகளால் அவப் பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம். வீட்டில் சிறு பிணி தலை தூக்கும். கோபத்தை அடக்கவும். வயிற்றுக் கோளாறு தோன்றக் கூடும்.

**சிங்கம்**

பசுமையான எண்ணங்கள் நெஞ்சில் அலை மோதும். எதையும் ஒழுங்கு முறையில் செய்வதால் திருப்தி அடைவீர்கள். காதல் வசப்பட்டவர்களுக்குக் கனிவான வாரம். சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும்.

**கன்னி**

பிறர் நம்பிக்கையைத்தவிர்க்கவும். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும். சிறு பிணி வாட்டும். ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம். முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள்.

**துலாம்**

தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிகஆர்வம் ஏற்படலாம். பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம்பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இவ்வாரம் அறிஞர்கள் சந்திப்பும் இடம்பெறும். பிதா வழி மூலம் பெருமைதரும் சம்பவங்கள் இடம்பெறும்.

**விருச்சிகம்**

புதிய தொழில் குறித்துச் சிந்தனை உருவாகும். கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு. புதுமனை கட்டுவதிலும் இனி கவனம் செலுத்தப்படலாம். இனத்தவர்களுடன் தொடர்பு பெருகும். வேண்டிய ஒருவரின் உதவி உற்சாகமான சூழ்நிலையை உருவாக்கும்.

**தனுசு**

வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். விருந்துபசாரங்களும் உண்டு. சிலருக்கு வாகன லாபமும் கிடைக்கலாம். மாணவர்களுக்குக்கல்வியில் முன்னேற்றம் உண்டு. புதுமையான சம்பவங்களும் இடம்பெறும். வியாபாரத்துறையில் வெற்றி உண்டு.

**மகரம்**

அவசரம் வேண்டாம். ஆயுத பீடைக்கும் இடமுண்டு. சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல் நிலையைப் பாதிக்கும். மனத்தில் அமைதி குன்றும். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தொழிற்துறையிலும் தொல்லைகளுக்கு இடமுண்டு அவதானமாக நடக்கவும்,

**கும்பம்**

ஆத்திரப் படுப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேனிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக்கூடும். பிறரின் தலையீடு வேதனையைத் தரும். தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக் கூடும் கடமையாற்றும் இடத்தில் நிதானம் வேண்டும்.

**மீனம்**

பொருள் வரவுக்கு இடமுண்டு. சுற்றாடலில் மதிப்பு உயரும், பெரியவர்களே உங்கள் ஆலோசனைகளைக் கேட்க முன்வருவார். புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

திருமலை
கு.வே.ரவீந்திரன்

# எமது சிறுகதை

அந்த வீட்டின் நிழலைக் கூட மிதிக்கக் கூடாது என்ற வைராக்கியத்தோடு இருந்த சுந்தரி, இப்போது அங்கு வர நேர்ந்து விட்ட தன் துர்ப்பாக்கியமான விதியின் சாபத்தை எண்ணி மனம் மறுகியவாறே, கதவைத் திறந்து கொண்டு உள்ளே போன போது ஹாலில் அவன் இருப்பது தெரிந்தது. யார் முகத்தில் விழிக்கக் கூடாது என்று அவள் கருதினாளோ அந்த நடேசு பாவக் கறை படிந்த அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே பிடிக்காமல், அவள் ஹாலின் ஒரு மூலையில், நிர்சக்தியாயும், சலனமற்று நிற்பது போலவும், தனிமையில் யோசித்தவாறு, வாய் திறந்து அழவும் தோன்றாமல், மௌனமாக, முகம் வெறித்து நின்றிருந்தாள்.

அவனோ அவள் வந்து அப்படி நின்று கொண்டிருப்பதைக் கவனியாதவன் போலச் சோபாவிலே சரிந்து கிடந்து தன்னுள் தானே ஆழ்ந்து போகும் ஒரு கற்பனைச் சுகத்தோடு, கண்களை மூடியவாறு. சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் அப்போது குடித்துக் கூட இருக்கலாம். அதைப்பற்றியெல்லாம் அவளுக்கென்ன.

வாழ்க்கையை நிரப்புவதற்குப் பணம் தேவை. அது மட்டுமே என்றால் இவனை மகா புருஷனென்றே நம்பவேண்டியிருக்கிறது. புகையிலைத் தரகனாக இருந்து சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் வட்டிக்கு விடுவதால், இவனிடம் நிறையப் பணம் சேர்ந்திருக்கிறது. அது இன்னும் குட்டி போடும்.

அவன் கண்ணை விழித்து இருட்டிலே அவளைக் கூர்ந்து பார்க்கிற மாதிரிப் பிரமையில்லாமல், அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் வந்து வெகு நேரமாகிறது. அந்த ஹால் நிசப்தமாக இருந்தது. எப்போதுமே அவள் வரும்போது, 'டேப்' பாடிக் கொண்டிருக்கும். இன்றைக்கு அது கூட இல்லாமல்- ஜடம மரத்துப் போயிருக்கிறது. அது அவனுக்கா என்று புரியாமல், அவன் வாழ்க்கையின் அறிவைத் தேடிக் கலங்கிக் கொண்டிருந்தாள். இரண்டும் துருவங்களே என்று அவளுக்குப் புரியாமலில்லை. அறிவு என்றால ஆன்மாவின் உயிர், இடைவிடாமல் பிரகாசிக்கிற அன்பைச் சொரியும் மனம் இவை ஒன்றும் இல்லாமல், மறு துருவத்தில், அறிவு மங்கிய சூன்ய இருட்டில் விழுந்து கிடக்கிற இந்த உயிர் மறந்து போன காசு தின்னும் பிணத்தை, மனிதன் என்று தரிசிக்க முடியவில்லையே என்று அவள் மனம் புழுங்கினாலும், அதை வெளியே வாய்விட்டுச் சொல்ல முடியாமல் அவள் விலங்கு மாட்டிக் கொண்டிருந்தாள். குடும்பம் என்ற பெயரில், சுமைகளைத் தாங்கமுடியாமல், சரிந்துபோன அந்த விருட்சத்தின் அடியில், ஆணி வேராக முளைத்து, அவளைத் தாங்க வந்த அவனும். உண்மையில் ஒரு பெரியவனே. இதை வெறுமனே ஒரு வேதவாக்காக அவள் நம்பினாலும், தர்மம் ஏற்காது. அது ஏற்க மறுத்தாலும், வாழ்க்கை ஒளிக்கு அவனே பொருள். அது அவனை மங்காமல் வைத்துக் கொண்டிருக்கிற பணம், அது இருப்பதால் அவனுக்குத் தர்மத்தைப் பற்றிய நினைப்பேயில்லை.

திடீரென்று அவன் விழித்துக்கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்துக் கனைத்தை உள்ளங்கையால், தேய்த்தவாறே அசடு வழியச் சிரித்தான்.

"என்ன வந்திட்டியே? காசுக்குத்தானே" என்றான்.

அவள் இதற்குப் பதில் ஒன்றும் சொல்லவராமல் பதிலைத் தேடி யோசிக்கிற மாதிரி முகம் குழம்ப ஜன்னலுக்கு வெளியே, பகல் மின்னும் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள். கறையே இல்லாமல், நிர்மலமாக விகசிக்கும், அந்த வானத்தைப் போல, பொய்யிலே பிழைத்துக்கொண்டிருக்கும் இந்தப் பூமியின் கறையை மாற்ற முடியுமா என்று அவள் யோசிக்கிற மாதிரி இருந்தது. அந்த யோசனை வந்தவுடன், புருவத்தை உயர்த்திக் கீழ்க்கண்ணால், அவனைத் திரும்பிப் பார்த்தவாறே, தீர்க்கமான, மெல்லிய குரலிலே, சலனமில்லாமல் அவள் கேட்டாள்.

"காசு என்றால், விசர்பிடித்த மாதிரி இருக்கு. அதுக்கு நான் வரேலை என்று சொன்னால், உங்களுக்கு விஷம் குடித்த மாதிரி ஆகிவிடும். நான் ஒட்டாண்டியாக, நிஜமாகவே அப்படி இருந்தால் தான், உங்களுக்கு வசதி காசு வரும் நான் காசுக்காரியாக மாறினால் உங்களுக்கு என்ன கிடைக்கும்? யோசித்துப்பார்த்தீர்களா?"

என்று முடிக்கும்போது, ஆவேசம் தாங்காமல், அவள் உணர்ச்சி வசப்பட்டு அழுதே விட்டாள்.

அவன் அதைக் கவனியாதவன் போலத் தொண்டையைச் செருமிக் கொண்டு அவளைப் பார்த்து விறைத்த குரலிலே சொன்னான்


"நீ காசுக்காரியாக மாறினால், சூரியன் நின்று போகும் நீ தேவசுந்தரியல்லே..."

"நான் தேவசுந்தரியோ, மானுடப் பேயோ? இருக்கட்டும். எப்படியாவது இருந்து விட்டுப் போறன்" என்று கூறித் தொடரமுடியாமல் பீறிட்டு வரும் அழுகையோடு, அவள் ஜன்னலருகே போய் வானத்தை வெறித்தாள்.

இருளிலே நனைகிற என்னைப் பார்த்து. இவன் இப்படித்தான் கேட்பான் இந்த இருளைத் துடைத்து எறிய முதலில் காசு வேணும் இது எப்படி, எந்தக் குறுக்கு வழியில் வந்தாலும் சரி இவன் மாதிரிக் காசைக் குட்டி போட வேணும். புகையிலைத் தரகில் குவிக்கிற பணம் போதாதென்று வட்டிக்கு வேறு விடுகிறான். இது உண்மையில் இவனை ஒரு முழு மனிதனாக்குமா? அப்படி நம்புவதே என்னைப் பொறுத்த வரை, கஷ்டமாக இருக்குது நான் எதுக்காக உயிரை விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேனோ...? அது... அந்த மனித தர்மத்தைப் பற்றிய நினைப்பில்லாமலே, ஒரு மிருகம் போல வாழ்ந்துகொண்டிருக்கிற இவனுக்கு, பணம் பெருமையைக் கொடுத்து விடுமா என்ன?

இவன் முகத்தில் விழிக்கிறதே, ஒரு பாவ தோஷமாய் நெஞ்சைச் சுடுகிறது. இதையும் மீறி, எதுக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்? எது என்னை, இப்படியெல்லாம் மாற்றி, இவன் முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கு? சேற்றிலே புதைந்து, மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற, சில்லு முறிந்து போன வாழ்க்கை வண்டி தான்- இது இருட்டிலே, தேர் ஓடுகிற வித்தை"

"தேரா? வண்டியா? நான் இழுக்கிறது இவன் முன்னால் சக்கரம் தேய்ந்து போகாத தேர்தான் என்றால் என்ன பெருமை எனக்கு? சரி-அதை



# ஒரு 'செக்' சிந்தனைக்கு வருகிறது

ஆனந்தி

மறந்து விடுவம் நிலத்தில் நின்று புதைந்து போற சக்கரம் இருக்கே..? அதை மீட்கிற வழி...

இவன் முகம்! ...இதை விட்டால் எனக்கு என்ன கதி? இவன் வட்டிக்காவது கொடுத்து உதவுகிறான். மற்றவர்களால், அதுவும் முடியவில்லை. கடைசியில் நான் தேடி வாறதே இவனைத் தான்.

அவள் தன்னை மறந்து விட்டு, நம்பிக்கையோடு கண்களை அகல விரித்து, அவனைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்.

'ஒரு செக் மாற்றித் தருவியளே?

"எது செக்' என்றான் அவன் அதிசயமாக.

"வழியில் கிடைத்தது. ஒரு மனிதன அன்புள்ளவன் தந்ததாகச் சொன்னால் நீங்கள் நம்புவீர்களா?"

"நான் நம்புவது இருக்கட்டும் அவன் கதை இங்கு வேண்டாம் நான் அவனைப் போவதுமில்லை எனக்குக் காசு வேணும்

நாலுமாதமாக நீ வட்டிக் காசு கூடத் தரேலை. நான் இதைத் திருப்பித்தரவேண்டுமா?

நீங்கள் அப்படி அபகரிக்க நினைத்தால் நான் ஒன்றும் செய்ய முடியாது இந்த இருநூறு ரூபாய்ச் செக் என்னிடம் வந்து ஒரு மாதமாகிறது. இதை மாற்றி எடுக்க நான் ஏறாத படிகளில்லை. எல்லோரும் தங்கள் பணத்தை எடுக்க அஞ்சுகிறார்கள். கேவலம் நாய் தின்னாக்காசு, காசு தின்னும் பிணங்கள், எல்லாம் சரிதான். நான் மனிதனை மட்டுமே தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். இந்த முத்திரை உடம்புக்கு மட்டும் தான் என்று நினைக்கவே அருவருப்பாக இருக்கு சரி போதும் எனக்குக் கண்ணை இருட்டுது"

அவள் அதைச் சொல்லிவிட்டுப் பேசிமுடித்த களைப்போடு சுவரிலே தலையைச் சாய்த்து கண்களை மூடியவாறு மௌனமாக இருந்தாள்.

அந்த மௌனத்தைக் கலைத்துக்கொண்டு மறு துருவத்திலேயிருந்து பேசுவது போல அவள் நிலைக்குப் பிடிபடாத அவன் குரல் கற்பனையில் கேட்கிற மாதிரி சுருதி குலைந்து போன, வெற்றுக்கனத்தோடு மெதுவாகக் கேட்டது.

"உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கு நான் உனக்குக் காசு தாறன். இப்ப இல்லை நாளைக்குப் பத்துமணி போல வா. ஒருவன் வட்டிக்காசு கொண்டு வாறதாய், சொல்லியிருக்கிறான். தாறன்."

"ஐயோ அப்படிச் சொல்லாதேங்கோ இன்றைக்குக் காசு எனக்கு அவசரம் தேவை. வெறும் கையோடு போய் நான் என்ன செய்வது?"

"நான் என்ன பொய்யே சொல்கிறன். காசு இல்லையென்றால் கேட்க வேணும். நான் போய்ப் படுக்கப் போறன் நீ போய், நாளைக்கு வா".

அவள் ஒரு நடைப்பிணம் மாதிரி எழுந்து வாசல் வரைக்கும் போய் அவனைத் திரும்பிப்பார்த்து நம்பிக்கை வராமல் குரல் வரண்டு போய்க் கேட்டாள்.

"நாளைக்கு நான் நம்பி வரலாமே?

"இதென்ன கதை" என்று தனக்கு ஒரு முத்திரை குத்தித் தன் பெருமையைப் பிரகடனப் படுத்தி அறிவிப்பது போலக் குரல் உயர்த்திக் கொக்கரித்துச் சிரித்தவாறே அவன் சொன்னபோது அவனைப் புரிந்து கொள்ளமுடியாமல் அவள் தடுமாறிக் குழம்பினாள். தன்னை ஒரு பெரிய மனிதனாக நினைத்து அவன் இப்படிச் சொன்ன விதம் அவளுக்கு மிகவும் ஏமாற்றமளிக்கக்கூடிய பொய்யாக மனதில் கசந்தது. அதைச் செயலிலும் காட்டினால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று அவள் ஆதங்கப்பட்டவாறே யோசனை செய்தாள்.

அவள் வீடு போய்ச் சேரும்போது நன்றாக இருட்டிவிட்டது. வீட்டினுள் கனத்திருந்த சோகத்தையும் மீறிக்கொண்டு எழும் பசியில் துடிக்கும் கடைசிக் குழந்தையின் அவலக்குரல் நாலைந்து வீடு தள்ளி அவள் நடந்து வரும் அந்தத் தெருவில் யாருமற்ற ஓர் அனாதையின் திக்கற்றுப்போன துன்பக் குரல்போல் இரைந்து கேட்டது. பகல் முழுக்கப் பெரியவள் மடியில் பசியுடன் கிடந்த களைப்போ என்னவோ.

"சீ? நான் என்ன மனுஷி; உள்ளத்திலே இதுகள் மீது ஒரு சொட்டு ஈரமாவது இருந்திருந்தால் இப்படி வெறும் கையோடு திரும்பி வந்திருப்பேனா? மனிதர் கொடுக்காவிட்டால் திருடப்படாதா? இதுகளின் பசிக்கு முன் உண்மையில் நான் யார்! உயிரைத் தேடிக்கொண்டு அலைந்தது போதும்.

அவள் காதைப் பொத்திக் கொண்டே உள்ளே பைத்தியம் பிடித்தவள் மாதிரி ஓடினாள். திண்ணைச்சுவரிலே குப்பி விளக்கை கொளுத்தி வைத்து விட்டுமூத்த பெண் பாமா கடைசிக்குழந்தையைமடியில் போட்டவாறே தூங்கிவழிந்து கொண்டிருந்தாள். மற்றக் குழந்தைகள் இரண்டும், அறைக்குள்ளே நோயில் படுத்துக்கொண்டிருந்த தகப்பனோடு முடங்கியிருந்தன. அவளும் கடைசிக் குழந்தையுடன் வேறு வழியில்லாமல் இருட்டிலே கண் விழித்துத்தூங்குவது போலப் பாயை விரித்துப்படுத்துக் கொண்டாள். தூக்கம் வந்தால்தானே, பெருகிவழியும் கண்ணீரையும் துடைக்க மறந்துபோய் நாதியற்றுச் செத்துக் கிடக்கும் ஒரு பிணம் மாதிரி நிலைகுத்தி வெறித்த பார்வையோடு மரத்துக்கிடந்தாள் பிறகு அதுவும் பிடிக்காமல் எழுந்து உட்கார்ந்து வெகு நேரமாய் விழித்துக்கொண்டிருந்தாள் பக்கத்திலே சுவரோடு தள்ளிப்படுத்துக்கொண்டிருந்த அவளைத் தொட்டுத் தாலிகட்டிய உரிமைக்காரனான அந்தப் புருஷன் கேட்டான்.

"என்ன? நீ இன்னும் படுக்கேலையே! படேன்".

நான் படுத்துச் சுகமாய் தூங்கி ஒரு யுகமாகிறது. நீங்கள் இப்படிப்படுத்துக்கொண்டீர்களே. அன்றிலிருந்து திறந்து மூடாமலிருக்கும் இந்தக் கண்களோடு நான் ஒரு புத்தி பேதலித்த பைத்தியக்காரி மாதிரி என்னசெய்கிறேன் என்று எனக்கே புரியேல்லை எல்லாம் கண் முன்னாலேயே எரிகிற மாதிரி இருக்கு அது என்னையே முற்றாகத் தகனம் பண்ணி, எரித்துவிடும்போல இருக்கு மெள்ள, மெள்ள என்னைவிட்டு, உங்களெல்லாரையும்விட்டு, இந்தப் பிரளயத்திலே அகப்பட்டு, அறிவு மங்கிக்கொண்டிருக்கு. இருட்டிலே என்னையே நம்பாமல், தற்கொலை பண்ணிக்கொள்கிற மாதிரி இருக்கு. இனிமேல், இப்படித்தான் நடக்கும்."

அவள் அவனுக்கு ஒன்றும் சொல்ல விரும்பாமல், நிர்ச்சிந்தையாக, ஒரு ஞானியைப் போலவே, மூளை மழுங்காமல் இருக்கவே முயன்றாள். ஆனால் அவள் ஞானியாகி விடவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

# வழி

எந்தையும் தாயும் இன்பவழி — செல்ல
வந்து பிறந்தேம் துன்பவழி
தாய்தரும் பால்ஒரு பாதிவழி — பிள்ளை
தனி நடந்திடவே மீதிவழி

ஐந்து வயதினில் பள்ளிவழி — அங்கே
அச்சம் அடைந்தால் கள்ளவழி!
கல்வி என்பதோர் காதவழி — அதில்
கல்லு விழுந்தால் வீதிவழி!

காதல் என்பதோர் பருவவழி — அந்தக்
காதல் முறிவுற்றார் கானல்வழி!
அம்பிகாபதி வந்தவழி — அவன்
ஆவிபோனதும் அந்தவழி

காந்தி நடந்தது சாந்திவழி — அவர்
கடவுள் ஆனதும் சாந்திவழி,
மாந்தர் போவதும் எந்தவழி — அவர்
மதிப்பு வருவதும் அந்தவழி

—சத்தியசீலன்

# நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—14

துவக்கு லைசன்ஸ்களுக்குக் கையெழுத்துப்போடுவதுதான் சிவில்சேவை உத்தியோகமா என்று கூறி அதை உதறித்தள்ளிய திரு சுந்தரலிங்கம். கொழும்பு ஆனந்தாக்கல்லூரியின் உதவி அதிபராகப்பதவியேற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளராப்பதவியேற்றதும் ஆனந்தாக் கல்லூரி உதவி அதிபர் பதவியை ராஜினுமாச் செய்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பதினெட்டு வருடங்கள் பேராசிரியராகப் பதவிவகித்த சுந்தரர் பல்கலைக்கழகத்துணைவேந்தராக வெள்ளைக்காரரான ஐவர் ஜெனிங்ஸ் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்துப்பேராசிரியர் பதவியை ராஜினுமாச் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் உரும்பராய்க் கிராமத்தில் 'லிங்க வாசா' என்னும் இல்லத்தில் 1895ஆம் ஆண்டில் பிறந்தவர் சுந்தரர். டாக்டர் பஞ்சலிங்கம், இலங்கையின் அட்டர்ணி ஜெனரலாகவும், பதில் பிரதம நீதியரசராகவும், பதில் கவர்னர் ஜெனரலாகவும் பதவி வகித்த நாகலிங்கம் சுந்தரரின் மூத்த சகோதரர்கள். பிரபல வழக்கறிஞராய்த் திகழ்ந்த தியாகலிங்கம் கியு ஸி. யும் கார்ட்டூம் பல்கலைக்கழகத்தில் விலங்கியல் பேராசிரியராகப் பதவி வகிக்கும் டாக்டர் அமிர்தலிங்கமும் இளையசகோதரர்கள். பஞ்சலிங்கங்களுள் நடுநாயகமாகத் திகழ்ந்தவர் சுந்தரலிங்கம்.

## சுவையான

## ஒரு வழக்கு

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவியைத் துறந்தபின் இலங்கையில் ஒரு அப்புக்காத்தாகத் தம்மைப் பதிவுசெய்து கொண்டார் சுந்தரர்.

கொழும்பில் ஒரு சுவையான வழக்கு நடந்தது. நீதிபதி ஆசனத்தில் நீதியரசர் திரு. ஸி. நாகலிங்கம், வழக்காளி தரப்பில் திரு. ஸி. தியாகலிங்கம், எதிரி தரப்பில் திரு. ஸி சுந்தரலிங்கம்.

இந்த அருமையான காட்சியை அன்றைய ஆங்கிலப்பத்திரிகைகள் சுவைபடச் செய்தியாக வெளியிட்டிருந்தன.

# தமிழரசுக்கட்சிக்கு சுந்தரர் எழுதிய கடிதம்

1947ஆம் ஆண்டில் முதலாவது பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் திரு சுந்தரலிங்கம் வவனியாத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

சுயேச்சையாகப் பாராளுமன்றம் சென்ற திரு. சுந்தரலிங்கத்தை அன்றையபிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா தமது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார். வணிக வியாபாரத்துறை அமைச்சராகப் பதவியேற்ற திரு. சுந்தரலிங்கம் தெங்குப்பொருள் விஷயமாக இங்கிலாந்துக்குச்சென்று பொருளாதாரத்துறையில் ஆங்கில அரசுடன் அரிய உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தினர். இதனால் இலங்கைக்கு ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் செலாவணி ரீதியாகச் சேமிக்க வழி வகுத்தார். பலரும் சுந்தரரைப்பாராட்டினர்.

## எஸ். எம். ஜி.

1948ஆம் ஆண்டில் இந்தியா பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை மசோதாவை டி. எஸ். சேனநாயகா கொண்டுவந்தபோது அமைச்சராக இருந்த திரு சுந்தரலிங்கம் அரசுடன் ஒத்துழைக்க மறுத்தார். மசோதாவுக்கு எதிராகத்தமது கருத்துக்களை வெளியிட்டார். இதன் விளைவாகத் திரு. சுந்தரலிங்கம் அமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

## சுந்தரர்

## எழுதிய கடிதம்

1956-ஆம் ஆண்டில் திரு. சுந்தரலிங்கம் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

1956-ஆம் ஆண்டில் தமிழர்கள் அடைந்துள்ள இழிநிலைக்குத்தானும் ஒரு காரணகர்த்தாவாக இருப்பதை நினைந்து வருந்துவதாக அக்கடிதத்தில் எழுயிருந்தார். பிரதமர் அதி கௌரவ டி. எஸ். சேனநாயகா வைத்தான் முற்றாக நம்பி நடந்ததாகவும் சுந்தரர் அதில் எழுதியிருந்தார். பூரண சுதந்திரம் கேட்பதானுல் எல்லா இனங்களும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாகக் கேட்டால்தான் கவனிக்கப்படும் என்று பிரிட்டிஷார் சொல்லியிருந்தார்களாம். எனவே அந்த ஒற்றுமையைக் காட்டுவதற்காகப் பூரணசுதந்திரக்கோரிக்கையில் சேர்ந்துகொள்ளுமாறு டி. எஸ். சேனநாயகா சுந்தரரைக் கேட்டிருந்தாராம். பிரதமரிடம் சிலவாக்குறுதிகளைக்கேட்டுப் பெற்றுக் கொண்ட பின்பு தமது சம்மதத்தைக் கொடுத்தாராம். இப்போது அதற்காக வருந்துவதாகத் தமது கடிதத்தில் சுந்தரர் எழுதியிருந்தார்.

டி. எஸ். சேனநாயா அமைச்சரவையில் சேர்ந்துகொண்டபோது அவரிடம் என்னவாக்குறுதிகளைப் பெற்றிருந்தாரென்பதைச் சுந்தரர் வெளியிடவில்லை.

(மிகுதி அடுத்த வாரம்)


# சித்தாலேப®

சித்தாலேப...

வலியையும், வேதனையையும் குணப்படுத்தும் அபாயமற்ற ஒரே மார்க்கம்! பல மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்டதே சித்தாலேப! வலியும், வேதனையும் ஏற்படும் பட்சத்தில் சித்தாலேபயை தடவினுல், உடனடி நிவாரணம் கிட்டும் மனித வர்க்கத்தின் கண் - சர்மம் போன்றவற்றிற்கு பாதகமற்றதாகவும், அபாயமற்றதாகவும் சித்தாலேப அமைந்துள்ளதாக இலங்கை அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. வாலிபர்களும், வயோதிபர்களும் சித்தலேபயின் நறுமணத்தினுல் கவர்ந்து ஈர்க்கப்படுகின்றனர்.

உபயோகிக்கும் முறை

## தடுமலுக்கும்,தலைவலிக்கும்:

மூக்கினுள்ளும், நெற்றியிலும், இருபக்கப் பொட்டியிலும், கழுத்தைச் சுற்றிலும் தடவவும். சித்தாலேப தைலத்தை சிறிது ஒரு கோப்பைக் கிண்ணக் கொதிநீரில் இட்டு, தலையை நன்கு ஒரு உளன் போர்வையினுல் மூடிக்கொண்டு எழும் ஆவியை ஆழமாக இழுத்து சுவாசித்தால் நிவாரணம் கிட்டும். அடிக்கடி இப்படி செய்தால் துரித நிவாரணம் கிட்டும்

## தொண்டை அழற்சி:

(டொன்சி லயிட்டிஸ்)

சித்தாலேபயை சிறிது விரலில் எடுத்து தொண்டையின் உட்புற சுவர்களிலும், கழுத்துப் பகுதிகளிலும் நன்முகத் தடவவும். இப்படி செய்வதனுல் தொண்டைச்சளி இறங்கி, தொண்டையும் சுத்தமடைகின்றது. கழுத்தை கம்பளித்துண்டினுல் கட்டிவைத்து ஒவ்வொரு மூன்று மணித்தியாலயத்துக்கு ஒருமுறை இதனை மீண்டும் மீண்டும் செய்தால் மாற்றத்தை நீங்கள் உணர்வீர்கள். நீங்கள் தொண்டை அழற்சியிலிருந்து பூரண குணமடைந்தவர்களாகின்றீர்கள்.

## இருமலுக்கும் ஆஸ்மாவுக்கும்:

எப்பொழுதாவது சுவாசிக்கக்கஷ்டமேற்பட்டால் அல்லது நெஞ்சு பாரமாகி வரட்சியான இருமல் ஏற்படும் பட்சத்தில் சித்தாலேபயை கழுத்தைச்சுற்றிலும் மார்பிலும் தடவவும். சித்தாலேபயை நன்முக முதுகெலும்பில் தடவி தேய்த்தால் மேலதிகநிவாணரம்கிட்டும். மேலும் சிறிதை தொண்டையில் தடவி ஓய்வு எடுக்க வேண்டும். சித்தாலேபயை கொதிநீரிலிட்டு சுவாசிக்கவும் பாதிக்கப்பட்ட உறுப்புகளை கம்பளிப் போர்வையினுல் போர்த்தி உஷ்ணமாக வைத்துக்கொள்வதுடன் கழுத்தைக் கம்பளி துணியினுல் கட்டிக் கொள்ளவும். ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கொரு முறை இதனை மீண்டும் மீண்டும் செய்வதால் குணமடைவீர்கள்.

## பல்வலிக்கு:

பூச்சிப்பல், பல் அரணையினுல் ஏற்படும் வலிக்கு, சிறிது சித்தாலேபயை எடுத்து பாதிக்கப்படும் பகுதிகளில் இடவும். வாயிலிருந்து துர்நாற்றம் ஏற்படும்பொழுதும், பற்கள் நிறம்மாறும் பொழுதும், சிறிது சித்தாலேபயை விரலில் எடுத்து விளிம்பில் நாள்தோறும் தடவவும். இப்படி செய்வதனுல் வாய்சுத்தமாகவும், பற்கள் நிறம் மாறுமலும் இருக்கும். பாவிக்கும் எந்த விதமான பற்பசையையும் தொடர்ந்தும் உபயோகிக்கலாம்.

## கீறல், வெட்டுக்காயம், வாத நோய்கள், வீக்கம்.

சந்திகளில் ஏற்படும் வலிகளினுலும், விளையாடும் பொழுது, பந்து அல்லது பந்து மட்டையினுல் ஏற்பட்ட தாக்கத்தினுல் தசையில் ஏற்படும் வீக்கத்தினுலும், அல்லது நடக்கும் பொழுதோ ஓடும் பொழுதோ ஏற்படும் தசைபிசகினுலும் ஏற்படும் பாதிப்புக்களுக்கு சித்தாலேப ஒரு உகந்த ஒளசதமாகும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் சித்தாலேபயை தடவி நன்முகத் தேய்க்கவும். பகுதிகளை கம்பளி "பெண்டேஜ்" களினுல் கட்டி உஷ்ணமாகவைத்துக்கொள்ளவேண்டும். கீறல்கள் வெட்டுக்காயங்களுக்கும் சித்தாலேபயை பாவியுங்கள். எல்லாவருத்தங்களுக்கும் மூன்று மணித்தியாலத்திற்கு ஒருமுறை மேற்கூறியபடி சிகிச்சை தொடரவேண்டும்.

## வயிற்று நோய்:

அஜீரணம், வயிறுஊதல், வயிற்று வலி ஏற்பட்டால் சித்தாலேபயை, வயிற்றில் தடவி அப்பகுதியை உஷ்ணமாக வைத்திருப்பதன் மூலம் குணப்படுத்தலாம் பூரண குணமடையும் வரை, ஒவ்வொரு மூன்று மணித்தியாலங்களுக்கொரு முறை சிகிச்சை செய்யவும்.

## மாதவிடாய்:

மாதவிடாய் காரணமாக ஏற்படும சகல வலிகளையும், சித்தாலேபயை வயிற்றைச் சுற்றிலும், பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் தடவி குணம் பெறலாம். பகுதிகளை உஷ்ணமாக வைத்திருக்கவும், தொடர்ச்சியாகச் சிகிச்சையளிக்கவும். கட்டாயம் குணமடைவீர்கள். நாளொன்றுக்கு சித்தாலேபயினுல் இருமுறை சிகிச்சையளிக்க வேண்டும்.

## சன்னிச்சுரம், மலேரியாகாய்ச்சல்:

முதுகெலும்பிலிருந்து, விசேடமாக கழுத்திலிருந்து கீழேயும், தலையிலிருந்து கால் வரையும் முழு உடம்பிலும் சித்தாலேபயைத் தடவ வேண்டும் உடம்பில் வலி ஏற்படும் பொழுதெல்லாம் சித்தாலேபயைத் தடவவும். உடம்பை உஷ்ணமாக வைத்திருந்து, சித்தாலேபயை இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு முறை தடவவும் குழந்தைகளாக இருந்தால், 1/4 கிறும் சித்தாலேபயை உபயோகியுங்கள். மேற்கூறிய சிகிச்சையை பூரண குணமடையும் வரை தொடரவும். எந்தச் சமயத்திலும் வெந்நீரை துரித பூரண பலனுக்காக அருந்துங்கள்.

## பொது அறிவுரை


மிருக கொழுப்பும், தீங்கும் அற்றதே சித்தாலேப. துரிதமாக இயங்கி துரித குணம் அளிப்பது சித்தாலேப. ஏனைய தைலத்தைப் போல அல்லாமல் சித்தாலேப ஒவ்வொரு வீட்டினதும் வைத்தியர் சித்தாலேபயை உபயோகிக்கும் பொழுது வெந்நீரைப் பாவித்து உடம்பை உஷ்ணமாகப் பாதுகாத்துக் கொள்ள தவறுதீர்கள். சிகிச்சை பெறும்பொழுது பூரண ஓய்வுபெற மறந்துவிடாதீர்கள். எல்லா வலியும், வேதனையும் பூரண குணமடையும் வரை சித்தாலேப உபயோகியுங்கள். நீங்கள் நிவாரணமடைந்த பின்பு சித்தாலேபயைப்பற்றி பிறருக்கும் கூறுங்கள்.

ஹெட்டிகொட இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
33/3, ஸ்ரீ தர்மராம ரோட் – இரத்மலானை.
தொலைபேசி: 716910

இது தருவது
சுத்தம
அழகு
ஆரோக்கியம

மருந்தூட்டப்பட்ட
விசாகா

இது தடுப்பது
பொடுகு
தலைமயிர் உதிர்தல்
சரும ரோகங்கள்



சார்லஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் ருவிஸ்ற்

தமிழில்: 'பேனு'

நாயிலை அடித்துக் கொன்றதின் பின் அன்றிரவு முழுவதும் அங்கேயே கழித்து விட்ட பில்சைக்ஸ் விடியற் காலையில் இரத்தம் படிந்திருந்த தனது கை கால்களைக் கழுவி உடுப்புக்களையும் கழிவிச் சுத்தப்படுத்திக் கொண்டான். நாயின் கால்களிலும் இரத்தம் படிந்திருந்ததால் அதனையும் கழுவிக்கொண்டான். பிறகு அறையை விட்டு வெளிக்கிட்டு வந்து கதவைபூட்டிக் கொண்டு புறப்பட்டான். அன்று முழுவதும் நடந்தபின் மாலையில் மலைப்பாங்கான ஓர் இடத்தில் பொது விடுதியொன்றுக்குள் போய் வெகு நேரம் வரை இருந்து மதுவும் அருந்தி நேரத்தைப் போக்கிக்கொண்டிருந்தான். பிறகு அங்கிருந்து புறப்பட்டு வெளியேறினன். போகும் வழியில் நான்ஸியின் கொலைபற்றி வழிப்போக்கர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டான் உடனே அங்கிருந்தும் விரைந்தான். பயமும் அச்சமும் அவனை விரட்டின. அதைவிட நான்ஸியின் ஆவி விரட்டிக் கொண்டுவருவது போன்ற பிரமையும் அவனைத் துரத்திக் கொண்டிருந்தது. வயல் வெளியில் ஒரு கொட்டிலைக்கண்டு அதில் சிறிது நேரம் ஓய்வெடுக்கலாம் என்று அதற்குள் சென்றுன். அங்கேயும் அமைதி ஏற்படவில்லை காலைவரை அங்கே கிடந்தபின் மீண்டும் லண்டனுக்கே திரும்பிச்செல்வதென திடீரென தீர்மானித்தான். அங்கே பேசுவதற்காகுதல் யாரும் இருப்பார்கள். எவரும் காணுமல் எங்காகிலும் ஒளித்திருக்கலாம். பேஜினிடம் கொஞ்சம் காசைக்கறந்து கொண்டு பிரான்சுக்குச் சென்று தப்பி விடலாம் என்றெல்லாம் யோசிக்கலானுன்..

உடனடியாகவே இந்த யோசனைப்படி செயல்படத்தொடங்கினன். ஆள் அரவம் குறைந்த பாதைகள் வழியாக நடக்கலானுன். இரவு வந்ததும் லண்டன் நகருக்குள் நுழைந்து விட வேண்டும் என்பது அவன் நோக்கம். இதற்கிடையில் அவனுடைய நாய் அவனைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது பிரச்சனையாகவிருந்தது. அது அவனைக் காட்டிக் கொடுத்துவிடும் என பயந்தான் எனவே எங்காயினும் குளத்தில் மூழ்கடித்து விட முடிவு செய்தான். எனவே வழியில் ஒரு பாரமான கல்லை எடுத்து தனது கைக்குட்டையில் முடிந்து கொண்டான் எஜமானனின் இந்த ஏற்பாட்டை புரிந்து கொண்டது போல் அந்த நாயும் வழக்கத்தை விட சற்றுத் தொலைவிலே வந்து கொண்டிருந்தது. ஒரு குளக்கரையை அடைந்ததும் சைக்ஸ் நாயைக் கூப்பிட்டான். அது அருகில் வந்தது. அவன் குனிந்து கல்லை அதன் கழுத்தில் கட்டுவதற்கு எத்தனித்த போது திமிறிக் கொண்டு ஓட்டம் பிடித்தது. வெகு நேரம் வரைக் காத்திருந்துவிட்டு நாய் வராததால் மீண்டும் பயணத்தை ஆரம்பித்தான் சைக்ஸ்.

அன்று இருள் சூழ்ந்து கொண்டிருந்த வேளையில பிரவுன்லோ ஒரு குதிரை வண்டியிலிருந்து இறங்கி தம் வீட்டின் கதவைத் தட்டினுர். அவருக்குப் பின்னல் இருவர் வேருெருவனை வண்டியிலிருந்து இறக்கிக் கொண்டு வந்தனர். அவ்வாறு கொண்டுவரப்பட்டவன் ''மங்க்ஸ்'' இவன் நீங்கள் சொல்லுகிற படி செய்யாவிட்டால் வெளியில் கொண்டு போய் பொலிசைக் கூப்பிட்டு ஒப்படைத்து விடுங்கள்'' என்று பிரவுன்லோ கடுமையான குரலில் கூறினுர்.

(தொடரும்)


நலமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி!

"ஷப்ரு"

உங்கள் நிதியத்தைப் பெருக்க
எங்கள் சேவையை நாடுங்கள்

முதலீடுகளுக்கு உயர்ந்த வட்டி 30% தருகிறேம்

உழைக்கும் போதே சேமிப்பதற்கும்
"ஷப்ரு" வழிகாட்டுகிறது.

உங்கள் எதிர்காலம் சுபீட்சம் அடைய
"ஷப்ரு"வுடன் இணைந்து சேமியுங்கள்.

உழைக்கும்போதே சேமிக்கும் திட்டம்

| மாதாந்தம் நீங்கள் சேமிக்கும் தொகை | 36 மாதமுடிவில் உங்களுக்குக்கிடைப்பது |
|---|---|
| ரூபா 100/= | ரூபா 4,727/60 |
| ,, 200/= | ,, 9,455/20 |
| ,, 300/= | ,, 14,182/80 |
| ,, 400/= | ,, 18,910/40 |
| ,, 500/= | ,, 23,638/00 |
| ,, 600/= | ,, 28,365/60 |
| ,, 700/= | ,, 33,093/20 |
| ,, 800/= | ,, 37,820/80 |
| ,, 900/= | ,, 42,548/40 |
| ,, 1000/= | ,, 47,276/00 |

உங்கள் சேமிப்புக்கு உயர்ந்த தொடர் வட்டி வழங்கப்படுகிறது.

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்

ஷப்ரு யுனிக்கோ பினுன்ஸ் லிமிட்டெட்

207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073.

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310, 500576


# அப்பா அம்மா மரங்கள்

உதங்கா

ஒரு திருமணம், பிறந்த தினம் அல்லது ஏதாவதொரு புதுமனைப்பிரவேசவிழா, இவைகளுக்கு நண்பர்களுக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டாமா? எதைக் கொடுப்பது? என்று அவஸ்தைப் படுகிறேம் ஆனல் நமது மூதாதையர் இது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

பழைய காலத்திலே மிகச் சிறந்தெதாரு பாரம்பரியம் இருந்துவந்தது அதனை நாம் தற்பொழுது கூட சிறந்ததொரு நடைமுறையாகக் கொண்டுவரமுடியும். அது தான் பயன்தரு மரங்களைப் பரிசாகக் கொடுப்பது.

அமெரிக்காவிற்கூட அந்த நாளில் புதுமணத் தம்பதிகள் புதுக்குடித்தனம் ஆரம்பித்தால் அவர்களை வாழ்த்தப் போகும் நண்பர்கள் பழமரக் கன்றுகளையும், அலங்காரப் பூச்செடிகளையும் பரிசாகக் கொடுப்பார்கள். கணவன் மனைவி இருவரும், வாசலின் இருபுறமும் இரு பழமரக் கன்றுகளை நடுவார்கள். இது ஓர் அப்பிளாகவோ அல்லது 'பீச்'ஆகவோஇருக்கும்.இன்று போது தங்கள் ஞாபகமாக மரக்கன்றுகளை நாட்டுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறுர்கள்.

இந்துக்களின் மணவிழாவில் இன்றும் அரசாணிமரம் மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டிலும் நடும் வழக்கம் இருந்து வருகிறது. இவை கூட அப்பா, அம்மா மரங்கள் தாம்.

மரங்கள் எப்படி அப்பாவாக அம்மாவாக மாற முடியும்? அன்று ஒருநாள் ஒரு வயோதிபர் நல்ல மாம்பழங்களைச் சந்தையில் விற்றுக் கொண்டிருந்தார், நான் கதையோடு கதையாக. ''உங்களின் சொந்தப் பழங்களா அல்லது வியாபாரமா?'' என்றேன் 'தம்பி, இது எனது தகப்பனுர் நட்ட நல்ல கறுத்தக் கொழும்பான் மரத்துப்பழம் எனக்கு என் பிள்ளைகள் சாப்பாட்டுக்கு என்று ஒருசதம் கூடத் தருவதில்லை. ஏதோ வளவில்நிற்கும் மா, பலா, தென்னை மரங்கள் தான் சாப்பாடு தருகின்றன. அதுவும் என் அப்பு நட்டமரங்கள்'' என்று சொன்னுர். எனவே அவரது தகப்பன் நட்டு வைத்த மரங்கள்தான் இன்று அவருக்குச் சோறு போடுகின்றன. சோறு போடும் மரங்கள் அப்பா அம்மா மரங்கள் தானே? ஆகவே திருமணமா? பிறந்தநாள் விழாவா, ஞாபகார்த்த விழாவா? எதுவானுலும் ஒரு பயன்தரு மரத்தை நாம் பரிசாகக்கொடுக்கப்பழகுவோம். பரிசாகக் கேட்டுவாங்குவோம் அவற்றை நட்டுச் செவ்வனே பராமரிப்போம். அவை எமக்கும் உணவு தந்து எமது பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள் அனைவருக்குமே உணவு தரும். அப்பா அம்மாக்களாக நீடு வாழ்ந்து எங்கள் பரம்பரையையே வாழ்விக்கும். நாம் ஒவ்வொருவரும் இனிமேலாவது இந்த அப்பா அம்மா மரங்களை நாட்டுவோம். நாட்டுக்கு நல்லது செய்வோம்.

கூட அங்கு பழைய வீடுகளில் இந்த 'அப்பா அம்மா மரங்கள் காலங்காலமாக நிற்பதை நாம் பார்க்கலாம். அவர்களின் பிள்ளைகள் இவற்றை 'அப்பா அம்மா மரங்கள்' என்று பெருமையுடன் கூறிக்கொள்வார் வார்கள்.

ஆனல் இன்றே எதிர்காலச் சந்ததிகளுக்கென்று நாம்எதனையும் செய்வதில்லை. இது பற்றி ஒரு மாங்கன்று நட்ட கிழவனுக்கும் அரசன் ஒருவனுக்கும் நடந்த சம்பாஷணைக் கதையொன்று கூட உள்ளது புதிய உலகம் எனப் பெயர் பெற்ற அமெரிக்காவின் புகழ்பூத்த இலச்சினை ஒரு காலத்தில் மரமாக இருந்தது. காரணம் ஆரம்பகாலத்தில் அதன் வளம் காட்டுவளம்தான்.

மனிதன் கட்டும் வீடுகள், நினைவுச்சின்னங்கள் எல்லாம் காலத்தோடு அழிந்தாலும் மரங்கள் அழியாது நின்று சிறந்த நினைவுச் சின்னமாக இருக்கும். இதனை நாம் தலவிருட்சம் என்று கோவில்களிலே உள்ள மிகப்புராதன மரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இன்றுகூட மன்னர்கள், ஜனதிபதிகள் வேற்று நாடுகளுக்கு விஜயம் செய்யும்

## மகிழாதே!

உன் அழகிலே நீ மனமகிழ்கிருயா? ரோஜாவும் கூடத்தான் அழகாயிருக்கிறது. ஆனல் அது சீக்கிரம் வாடிப்போய் விடுகிறது. மலருக்கும் அழகுக்கும் அற்ப வாழ்வுதான் அளிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, அதை எண்ணி மகிழாதே.

— கிரேக்கக்கவிஞர்

## இராஜராஜசோழன் பேரரசன் – 3

# சோழர் ஒதுங்கி வாழ்ந்த காலம்

### க.சி.குலரத்தினம்

சோழ மன்னர்கள், பேரரசர்கள் வரலாற்றைக் கூறும் கல்வெட்டுகள், செப்பேடுகள் ஒன்பதினாயிரத்துக்கும் அதிகமானவையாகும். இவற்றை விட ஊர்கள் தோறும் நூற்றுக்கணக்கான திருக்கோயில்கள் கலைவளம் ததும்ப நின்று கதைகள் கூறுகின்றன. ஆனைமங்கலம், திருவாலங்காடு முதலிய தலைப்புகளில் நிலவும் செப்பேடுகள் வரலாற்றுப் புகழ் பெற்றவையாகும்,

இங்ஙனம் புகழ் மணக்க நாட்டையாண்ட முதலிற் சோழர் சிலகாலம் அதிகாரம் குறைந்து சிற்றரசர்களாகி ஒதுங்கி வாழவேண்டியவராயினர், அவர்கள் ஒதுக்கியவர்கள் பல்லவர்கள் என்னும் பெயர் பெற்ற ஒரு கலப்பினத்தவராவர். பல்லவர் எவயார் யாவர் என்பது பற்றிப் பலத்த ஆராய்ச்சிகள் ஒரு காலத்தில் நடைபெற்று இன்று ஓய்ந்து விட்டது. பல்லவர் ஈழநாட்டவர் என்றும் அவர்கள் இலங்கையின் வடபாகத்திலிருந்து சென்றவர்கள் என்றும் மூதறிஞர் முதலியார் இராசநாயகம் அவர்கள் எழுதியுள்ளார்.

பல்லவர்கள் எவராயினும் அவர்கள் தொண்டை நாட்டின் காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு தென்னகத்தின் பெரும் பிரதேசத்தைப் பேரரசராய்ப் பரிபாலித்த போது பழைய சோழர் சிற்றரசர்களாய் ஒதுங்கி வாழ்ந்து வந்தார்கள்.

பல்லவப்பேரரசர்கள் சமண சமயத்தை மேற்கொண்டு தமிழரிடையே சிலகாலம் வேறுபட்டு வாழ்ந்தார்களாயினும் நாளடைவில் திருநாவுக்கரசு நாயனர், திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் முதலாய தேவார முதலிகள் முயற்சியால் மனந்திருந்தி உளம் திரும்பிப் பழைய செந்நெறியைப் பின்பற்றியதோடு, கலைப்பொலிவு ததும்பிய கற்கோவிலையும்கட்டுவாராயினர்.

இத்தகைய திசை திருப்பத்தில் சோழன் மகளான மங்கையர்க்கரசியார் பாண்டிமாதேவியாகி மதுரையில் செய்த சைவப்பணி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனராலே திருமுறையிற் போற்றப் பெற்றுள்ளது இதில் பாண்டிநாட்டைச் சமணத்தினின்றும் கரையேற்றிய தனிப்பெருமை மங்கையர்க்கரசியாருக்கே உரியதாயிருந்தது என்பது போதரும் "மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை" எனப் பெயர் பெற்ற மங்கை நல்லாள் அவராவர்.

பல்லவர் காலத்தில் சைவத் திருமுறைகளேயன்றி வைணவ திவ்வியப் பிரபந்தங்களும் ஒலிக்கவே அக்காலம் பக்தியிலக்கியம் வளர்ந்த பொற்காலம் என வரலாற்றுச் சிறப்புப்பெற்றுள்ளது. இக்காலம் சொற்கலை வளர்ச்சியோடு கற்கோயில்களும் சிற்பமும் ஓவியமும் பெருமளவில் வளர்ந்த நற்காலமாயிற்று. தமிழோடு வடமொழியாய சமஸ்கிருதம் பெருமளவில் கலந்துறவாடிக் காவியங்கள் இலக்கியங்களின் போக்கும் கலப்பின வகையில் வேககதியடைந்தன.

பல்லவப் பேரரசர்கள் சிவபெருமானை நன்றாக வணங்கி சிவஸ்கந்தவர்மன் முதலிய திருப்பெயர்களைப் பூண்டார்கள், சிவப்பணியைப் பெருமளவில் செய்தார்கள். இவனை மறவாத சிந்தையரான பல்லவர் பலரின் புகழ் இலக்கியங்களில் மணக்கிறது. சிவஸ்கந்தவர்மன் என்பான் பெருமதிகாரம் பெற்று அசுவமேதயாகம் வாஜயப் பேயயாகம் முதலிய யாகங்கள் செய்து சிவனை வணங்கியவனுவன். அவன் ஒதுங்கி வாழ்ந்த சோழரின் தஞ்சை நகரையும் கைப்பற்றிய வீரனுன்.

இவ்வாறாக மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், பரமேசுவரவர்மன், இராசசிம்மன், நந்திவர்மன், தந்திவர்மன், நிருபதுங்கவர்மன் முதலானோர் பெருவலி படைத்த பேரரசர்களாய்ப் பெருமளவிற் சைவப்பணியும் தமிழ்ப்பணியும் சமூகப் பணியும் செய்து அரசாண்டார்கள்.

பல்லவர்களைப் போலப் பரந்த அளவில் பணிபுரிந்தவர்கள் அக்காலத்தில் மிகவும் குறைவு என்றே கூறவேண்டும் குகைக்கோயில்கள், கற்கோயில்கள், சிற்பங்கள் யாவும் இன்றும் கண்ணைக் கவரும் வண்ணம் நின்று நிலவுகின்றன. பெரும்பாறைகளிலும், ஒற்றைக் கற்களிலும் கோயில்கள் குடைந்தமைத்த கைத்திறன் அக்காலத்தவரின் தனிவண்ணம் மாமல்லனின் அழகு மலிந்த கோயில்கள் உலகப் புகழ்பெற்றுள்ளன.

பாறைச்சுவர்களில் தேவர்கள், நாகர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் உருப்பெற்று அழகுக் கோலத்தில் காட்சி கொடுக்குந்தன்மை அற்புதமாயுள்ளன. பல்லவ வேந்தர்கள் கட்டடக் கலையை வளர்த்த செம்மையைக் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் வைகுந்தப் பெருமாள் கோயிலும் கண்டு களிக்கலாம். மாபலிபுரத்தைச் சிற்பக் கூடமாக்கிய சாதனை பல்லவர்க்கே உரியதாகும்.

கைலாச நாதர் கோயிற் சுவர்களில் சிவபெருமானைக் குறிக்கும் சிற்பவரிசை பெரியது திருச்சடையைத் திசைகள் எங்கும் விரித்த அழகும், எட்டுத் திருக்கரங்கள் அசையத் திருநடனமாடும் அழகும் சொல்ல முடியாதவை கண்டு பருகவேண்டியவை. கோயில் உள்மண்டபத்தில் மூழு முதற் கடவுளாய சிவபெருமானை திருமால், திருமகள், பிரமன் நாமகள் முதலானோர் யாவரும் வணங்கி நிற்கும் கோலம் சிற்பத்தில் அமைந்துள்ளன.

இனிப் புராணேதிகாச காலத்துக் கதைகளைச் சொல்லும் சிற்பங்களின் வரிசையிற் பாற்கடல் கடைந்த வரலாறு, இயமனை உதைத் தருளிய வரலாறு, பாசுபதாஸ்திரம் கொடுத்தருளிய வரலாறு, இராவணனை அடக்கியருளிய வரலாறு. திருமால் சக்கரம் பெற்ற வரலாறு, அம்மையப்பர் திருமணக் காட்சி, பராசக்தியின் ஏழு வகையான திருவுருவங்கள் என்பனவும் பிறவும் உள்ளன. பல்லவர்களின் ஓவியங்களைப் பார்க்கக் கூடிய இடம் திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் சித்தன்னவாசல் ஆகும்.

பல்லவர்களுக்குக் காடுவெட்டிகள் என்று பெயர். அவர்கள் காடு வெட்டி நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கிய சேவையாளர். அவர்கள் தொட்ட ஏரிகள் குளங்கள் அவர்களின் பெயர்களால் இராச தடாகம், மகேந்திர தடாகம், பரமேஸ்வர தடாகம், வைர மோகன் தடாகம் என்றெல்லாம் நிலவின. அவர்கள் காவேரியினின்றும் தடாகங்களுக்கு நீர் பாய்வதற்கு நீண்ட வாய்க்கால்களும் அமைத் திருந்தனர். பல்லவர் பண்ணிய பணிகள் பின் வந்த சோழர்களுக்கு வழியமைத் திருந்தன

பழைய சோழர் அதிகாரம் குறைந்திருந்தகாலத்தில் எழுந்தவர்களுள் சாளுக்கியர் என்பாரும் ஒரு கூட்டத்தவர். சாளுக்கியரில் முதல் மன்னன் புலிகேசி. அவன் வாதாபி நகரைக் கைப்பற்றி,543 முதல் 566 வரை ஆண்டவன், அவன் மரபில் இன்னும் சிலர் புலிகேசி என்னும் பெயரில் அரசாண்டனர். சாளுக்கியருக்கும் பல்லவர்களுக்கும் பெரும் போராட்டம் நடைபெற்றதும் உண்டு.

சாளுக்கியரின் அதிகாரம் ஓங்கிய வேளையில் இராஷ்டிரகூடர்கள் அவர்களுக்குப் பணிந்தனர் இராஷ்டிரகூடர்கள் அக்காலத்துப் பேரரசர்களுள் ஒருவர் அவர்கள் வலிமையை 973 ஆம் ஆண்டில் முறியடித்த தைலர் என்னும் வீரர் 973 கல்யாணிச் சாளுக்கிய மரபு என ஒன்றை வலுவாக்கினர்.

சோழர் வலிகுறைந்து வாழ்ந்த காலத்தில் பல்லவர் பாண்டியர், சாளுக்கியர் ஆகியோர் முறைக்கு முறை முறியடித்தனர். பல்லவரின் ஆட்சியின் கீழ் அடங்கி வாழ்ந்த சோழன் விஜயாலயன் 850 ஆம் ஆண்டளவில் வீறு கொண்டெழுந்தான் முத்தரையர் என்பவரிடமிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றினன். சோழர் தலையெடுக்கத் தொடங்கினர்.

[வளரும்]

## சிறுகதை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் இருமல்சப்தம், இரவு முழுக்க விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தது நாலைந்து நாளாய், மருந்துகூட வாங்க வழியில்லாமல். அவன் ஓயாமல் இருமிக்கொண்டே இருக்கிறுன். அவன் ஓர் அச்சகத்திலே, நல்ல வேலையில் இருந்தவன், நோய்வாய்ப்பட்டதால் அந்த வேலையும் நின்றுபோய் விட்டது. அதற்குப் பென்ஷனும் கிடையாது, அதனுல் ஓட முடியாமல் சில்லுக்கழன்று போன அந்தக்குடும்ப வண்டி, அப்படியே நின்றுவிட்டது அந்தச் சில்லை நிமிர்த்தி, நேர் வழியில் வண்டியை இழுத்துப் போகமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற இவளுக்கு இனிமேல் இரவும் பகலும் ஒன்றுதான். இரவிலே இப்படித் தூங்காமல் இருப்பதும், பகலிலே விழித்துக் கொண்டே தூங்கிப்போவதும், ஒரு சுகமான கற்பனையற்ற மயக்கமாக இருக்கிறது துக்கமே தெரியவில்லை

பொழுது விடிந்ததும், சீனியில்லாமல், போட்டுக்குடித்த வெறும் தேநீரோடு பதி மணிக்கு அவன் நடேசுவீட்டிற்குக் கிளம்பினுள்.

நல்லவேளை, அவன் வீட்டிலேதான் இருந்தான். அவனைத் தேடிக்கொண்டு வந்து நிற்கிறபோது மனம் கூசியது. அவன் கண்ணைத் திறந்து. அவளை நிமிர்ந்துபார்த்துவிட்டு ஆங்காரமாகக் கேட்டான்.

!"என்ன வந்திட்டியே...?"

அவன் சுருக்கமாகக் கேட்டது, அவள் மனதில் சுருக்கென்று தைத்தது! அவன் தன்னைப் புரிந்து கொள்ளவேண்டுமென்று எதிர்பார்கிறது கூட, தன்னுடைய பலவீனத்தின் மூடப்படியே என்று, அவளுக்குப்பட்டது. காசு கண்ணை மறைக்கிற இருட்டில் இந்தக் குருடன் எதைத்தான் பார்ப்பான்? முதலில் இவன் கண்ணைத் திறக்கவேணும். ஆனுல் அதுக்கு நானல்ல நான் இந்த மாதிரி வெறுங்கையோடு இருப்பதே இவனின் பாவவிருத்திக்கு வசதியாய்ப் போச்சு. நான்மாறினுல்...அது நடக்குமா?

அவள் இதை இயல்புக்கு மாருகக் கற்பனை செய்து கொண்டிருந்த போது அவன் எழுந்து உள்ளே போய்க் காசோடு திரும்பிவந்தான்.

"இந்தா! சரியாக இருக்கிறதா என்றுஎண்ணிப்பார்."

அவள் மகிழ்ச்சியுடன் அதை வாங்கி எண்ணிப்பார்த்தாள்.

அவள் எண்ணி முடித்து விட்டு ஏமாற்றமளிக்கக் கூடிய அந்தப் பொய்யில் கரைந்து போன, தான் ஒருநிழலாகவே மாறிவிட்ட நிலையில், முகம் கறுத்துக் கொண்டு, அதிர்ச்சியான குரலிலே அவனைப் பார்த்து அவள் தெளிவாகக் கேட்டாள்.

"என்ன இருபது குறையுதே?"

"எனக்குக் கமிஷன் வேண்டாமா? நான் உன்னை நம்பிக் காசு தாறனே. உன்ரை செக் உண்மையானது தான் என்பதற்கு என்ன ஆதாரமிருக்கு. இது கொழும்புக்குப் போய் வர நாளாகுமே. அது வரைக்கும் நீ காத்திருப்பியே. இது என்ரை காசு. இதுக்குஒருமாத வட்டி, நான் எடுத்துக்கொண்டிருக்கிறன் இருபது குறைந்தால் உனக்கென்ன. நீ வட்டிக்குக் காசு வாங்குவாயே! அப்படி நினைத்துக்கொள். சரிதானே"-

என்று அழுத்தமாக அவன் கேட்கிறபோது, அவனை அதட்டி, வசமாக்குவதுபோல் அவள் காரமாக உரத்துக்கேட்டது, அவளைச் சினம் கொள்ள வைத்தது அவன் கேட்ட விதத்தைக் காட்டிலும், அநாகரிகமாக அவன் நடந்து கொண்டிருக்கிருனே. அவன் செய்துவருகின்ற எல்லாப் பாவங்களுக்கும் சிகரம் வைத்த மாதிரி, இதுவே ரொம்பக் குரூரமாவதாய், அவனை நெருப்பில் இட்டு வதைத்தது அவள் அந்த நெருப்பிலேயே புடம் பெற்றுப் புதிதாக எழுவது போல, அவனின் பாவத்துக்கு ஈடு கொடுத்து இனியும் சரிந்துபோக முடியாது என்று கருதி, அதற்காகத் தனது வாழ்க்கையையே துறந்துவிடத் துணிந்தவளாய். அவனை நல்வழிப்படுத்திப் புனிதமாக்க வேண்டுமென்ற இலட்சிய வேட்கையோடு, ஆவேசமாக அவனை நிமிர்ந்து பார்த்துக் கொண்டே, எங்கோ லயித்த கற்பனையுடன், குரலை மாற்றுமல அழுத்தமாய்ச் சொன்னுள்

"இந்தச் காசை நீங்களே வைத்திருங்கோ. இதை வாங்கினுல், என் கையே அழுகி விழுந்துவிடும். ஏற்கனவே பிணம் தின்ற மாதிரி இருக்கு, நான் இந்த ஜென்மத்திலே, இதைத் தொடமாட்டேன். இது சத்தியம். என்ரை செக்கைத் தந்திடுங்கோ..."

"அடீ விசரீ! காசு இல்லாமல், நீ என்ன செய்யப் போருய். பிழைப்பியோ?"

"எல்லாம் பிழைத்துக் கொள்வேன்" என்றுள் அவள். இதுவரை இல்லாத புதிய கர்வத்துடன், பிறகு அவன் பேசவில்லை.

(யாவும் கற்பனை)

## நீண்ட இடைவெளிக்குப் பின்....

நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு ஜூன் மாதம் 20 ஆம் திகதி, காலை யாழ் ட்றிம்மர் மண்டபம் புதுப்பொலிவு கொண்டு விளங்கியது. வித்தியாசமான முறையில் நூற்றுக்கணக்காகப் பலர் கலந்து கொண்டார்கள், பெரியோர்கள், மாணவ மாணவிகள், கலை அன்பர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அங்கே கூடினுர்கள் இப்படி ஒரு பெருமை இடையில் வெகுகாலம் இல்லாமல் இப்போது ட்றிம்மர் மண்டபத்துக்குக் கிடைக்கக் காரணம் என்ன? அது எப்படி நிகழ்ந்தது?

சற்று லௌகீகமான சூழ்நிலை. எழிலார்ந்த புன்னகையுடனும் பூரிப்போடும் இளைஞரும் யுவதிகளும் செல்கின்றனர். என்ன ஆகிருதி! என்ன கம்பீரம்!

அது, ஒரு நற்செய்தி அன்று யாழ் மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்ற ஆதரவில் நடந்த 'உதய ராகங்கள்'.

வாழ்ப்பாணத்தில் நீண்ட கால இருள் வாழ்க்கை. உண்ணுவதும் உறங்குவதுமாக முடிந்த காலம் துயில் நீங்கி எழுந்து வர அழைப்பது போல் அமைகிறது உதயராகங்கள். சுப்ரபாதம் - திருப்பள்ளி எழுச்சி என்று நினைக்க வேண்டாம்.

காலையில் சுமார் 9-30 மணி மங்களமான வீணை இசை எங்கும் பரவுகிறது. இது திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குரு தமதுகுழுவுடன் இணைந்து வழங்கும் வீணை இசை. இவரின் சாகித்தியத்தில் ஆண்களும் பெண்களும் மெய்மறந்து இருக்கிருர்கள். அந்த நேர அமைதியில் வீணையின் நரம்புகளிலிருந்து தெறித்த ராகங்கள் மெல்லமெல்லவாக எழுந்து உயர்ந்து அடங்குகின்றன

பரபரப்பு மிக்க நாட்களில் பரபரப்பு அடங்கிவிட்டதால், அமைதி காணவேண்டும் என்ற எழுச்சி காரணமாகக் கலை இன்பத்தை நாடிவந்த கலா ரசிகர்கள் நிகழ்ச்சியில் நெகிழ்ச்சி அடைந்து காணப்பட்ட வேளையில் இரண்டாம் நிகழ்ச்சியாக திருமதி விமலா யோகநாதனின் மாணவிகள் வழங்கிய "தில்லானு" தொடங்கியது

இந்த ஆனந்தக் கூடத்துக்கு ஆதர்சமாகப் பாட்டும்அதற்கு துணை போகிற இசைக் குரலும் அத்தனையும் கவித்துவமான ஆதங்கங்களை மனசு முழுக்க நிரம்பின. தொடர்ந்தாற் போல் திருமதி விமலா யோகநாதனின் மாணவிகள் ஆடிய நாட்டிய இசைக் கச்சேரி. இந்த இசை நாடகத்தில் குழந்தைகள் ஒன்றுபட்டு ஆடிய ஆட்டமும், ஈசன் ஆடிய ஆனந்தத் தாண்டவமும்,சிவகாம சுந்தரியின் லாஜ்யமும் எல்லோரையும் மனங் கனிய வைத்தன.

இடைவேளை முடிந்து அனைவரும் திரும்பிவந்து அமர்ந்ததும் திரு. கே எஸ். பாலச்சந்திரன் மேடையில் தோற்றம் தருகிருர் இவருடைய 'நகைச்சுவை வார்ப்புக்கள்' சமுதாயச் சீர்திருத்தப் பணியில் சில ஆக்கபூர்வமான நையாண்டி உருப்படிகள், நலிவுற்ற உள்ளங்களும் உடல்களும் நலம்பெற நகைச்சுவை வார்ப்புக்கள் சிறந்த ஔடதம்.

மிகவும் சுவையாகத் தொடர்ந்து உதய ராகங்கள் நடக்கிறது இப்போது மதியவேளை. மதிய ராகங்களா? இல்லை. கடைசி நிகழ்ச்சியாக "உதய ராக இசைத்தென்றல்". யாழ் ரமணன் குழுவினர் வழங்கிய இந்நிகழ்ச்சியில் கங்கையும் யமுனையும் சங்கமமாதல்போல் கீழைத்தேய மேலைத்தேய இசை வடிவங்கள் ஒன்று சேர்கின்றன ஈற்றில் இசைக்கோலம் உச்சஸ்தாயில் கங்கையாகப் பொங்கி வருகிறது அன்று அப்படிப் பொங்கிய கங்கை புயலுக்குப் பின் அமைதியாகிறது. மறுபடியும் இசைத் தென்றல்.

மதியபோசன வேளை நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது முடிவடைகிறது.

- ஈ ஆர் திருச்செல்வம்

# உங்கள் பேச்சு பிறரைக் கவரவேண்டுமா?

★ வாரியார் சுவாமிகள்

"பேசப்போனாயோ? சாகப் போனாயோ?" என்பது பழமொழி. பேசுவதுதான் எல்லாவற்றிலும் கடினமானது. மரணத்தை அதற்கு உவமையாகச் சொல்வதால் பேசுவதன் அருமை தெற்றெனத் தெரிகின்றதல்லவா?

உயிர்களையெல்லாம் இருவகையாகப் பிரித்தார்கள். ஒன்று உயர்திணை, மற்றொன்று அஃறிணை. அஃறிணை என்றால் உயர்வு அல்லாத திணை என்று பொருள். உயர்வுதாழ்வு என்று கூறுதல் வேண்டும்.

"கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி... மற்றவர் அறியா மாணிக்கமலை" என்றார். கல்லாதவர்களைக் கல்லாதவர் என்று பேசுதல் கூடாது.

பேச்சுக்கு எட்டு அங்கங்கள் உண்டு; அஷ்டாங்கயோகம் என்றும், அஷ்டபுஷ்பமென்றும் கூறுவதுபோல், பேச்சும் எட்டுவித உறுப்புக்களை உடையது.

பேச்சுக்கு உண்மை, நன்மை, அன்பு, நிதானம், இனிமை, ஆழம், சமயமறிதல், சபையறிதல் என்ற இந்த எட்டுத் தன்மைகள் அமைதல் வேண்டும்.

1. உண்மையே பேசுக, 2. நன்மையே பேசுக, 3. அன்பாகப் பேசுக, 4 நிதானமாகப் பேசுக, 5. இனிமையாகப் பேசுக' 6. ஆழமுடையதாகச் சிந்தித்துப்பேசுக, 7. சமயம் அறிந்துபேசுக, 8. சபையறிந்து பேசுக.

பேசுவதெல்லாம் பேச்சாகாது. பேச்சு ஒரு சிறந்த கலை.

"விரைந்து தொழில்
கேட்கும் ஞாலம்
நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப்
பெறின்"

என்ற திருவள்ளுவர் திருவாக்கால் அறிக!

சொற்செல்வம் என்றும் பேச்சுக்குப்பெயர். சொல்லின் செல்வராக விளங்கினார் அநுமந்தர். சொலலுக்கு உள்ள ஆற்றல் வில்லுக்கும் கிடையாது. அதனால்தான் திருவள்ளுவர்.

"வில்லேருழவர் பகை
கொள்ளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை"

என்கிறார்.

காற்றினும் கூடிய வேகமுடையது சொல். அதனால் கம்பநாடார், "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்" என்கிறார்.

நாம் கடிதங்கள் எழுதும் போது நலம் என்று எழுதுகின்றோம் அவ்விடம் நலங்களை எழுதுங்கள் என்று எழுதுகின்றோம். நலமறிய விரும்புகின்றோம். நலங்கள்பல; மனைநலம்; மக்கள் நலம், தனநலம், மனநலம், இனநலம், பிணிஇலா நலம், நிலநலம், உணவுநலம்- இப்படிப் பல நலன்கள் உண்டு. அவற்றுள் தலையாயநலம் நாநலம்.

"நாநலம் என்னும்
நலனுடைமை அந்நலம்
யாநலத்துள்ள தூஉமன்று"

என்பது பொய்யாமொழி.

எந்நலத்தினும் உயர்ந்தது சொன்னலம். இச்சொன்னலம் பன்னலமும் பயக்கும். சொல்லிலே இறைவன் உறைகின்றான்.

"இறைவன் எங்கேயிருக்கின்றான்?" என்று இரணியன் வினவிய வினவுக்குப் பிரகலாதர்; "சொல்லினும் உவன்" என்று விடைபகர்ந்தார்.

சொல்லானது நலன்களின் கருவூலம் என உணர்க.

இனி அந்தச் சொல்லின் உறுப்புக்கள் எட்டு என்று முன்னே கண்டோம் அல்லவா? அதனைப்பற்றி நினைவுசெய்தல் வேண்டும். முதலாவது:

வேதம் தொடங்கும்போதே "சத்யம் வத்" என்றுகூறுகின்றது. சத்தியத்தைப்பேசு என்பது இதன் பொருள்.

சத்தியமே நித்தியம். கடவுள் சத்தியவடிவினர். சத்திய உபாசனை புரிபவர் நித்திய வாழ்வு பெறுபவர்.

"பொய்வளரு நெஞ்சினர்கள்
காணாத காட்சியே
பொய்யிலா மெய்யர்
அறிவில்
போத பரிபூரண அகண்டிதா
காரமாய்ப்
போக்கு வரவற்ற பொருளே"

என்கின்றார் தாயுமானார்.

பயிருக்கு முள்வேலி; உயிருக்கு உண்மை வேலி. சத்தியத்தால் உயர்ந்தவன் அரிச்சந்திரன்.

சத்தியத்திற்காகத் தசரதர் தன் உயிரையே தியாகம் செய்துவிட்டார்.

காணாத முடியைக்கண்டேன் என்று பொய்யுரை புகன்ற பிரமதேவருக்கு ஆலயம் இல்லாத குறைவு ஏற்பட்டது. பொய்க்கரி புகன்ற தாழை சிவபூசைக்குப் பயன்பெறு தொழிந்தது.

ஆகவே உண்மையையே உரைக்க.

இரண்டாவது:

நன்மையே பேசுக. உண்மை பேசினால் மட்டும் சிறப்பில்லை. உண்மையில் நன்மை கலந்திருக்கவேண்டும். நன்மை விரவாத உண்மை உயர்வுபெறாது.

உதவியவர்:
கணேஷ்

ஒருவன் ஒருகோயிலில் ஜபம் புரிந்து கொண்டிருக்கின்றான். ஒரு பெண்மணி வழிபாட்டுக்கு வந்தாள். ஒரு குடியன் குண்டாந்தடி எடுத்துக்கொண்டு அவளைப் புடைக்கும்பொருட்டு வந்து 'ஐயா இங்கே வந்த பெண் எங்கே?' என்று வினவினான். இங்கே உண்மை பேசினால் அந்த மங்கை அடிபட்டுத் துன்புறுவாள். ஆதலால்இங்கே உண்மைக்கு உயர்வில்லை. நன்மையாகப் பேசவேண்டும். இம்சை விளையும் உண்மை உண்மையாகாது.

"வாய்மை எனப்படுவதியாதெனில் யாதொன்றும் தீமையிலாத சொலல்" என்கிறார் திருவள்ளுவர்.

மூன்றாவது:

அன்புடன் பேசுக, அன்புகலவாத-இனிமையோ கனிவோ இல்லாதபேச்சுநன்மையாகாது

"இன்சொலால் ஈரம் அளைஇப்படி றிலவாஞ் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்"

யாரிடமும் அன்பு கலந்து பேசுதல் வேண்டும். அன்புடைய பேச்சு செவியைக் குளிர்விக்கும். சிந்தையைக் குளிர்விக்கும். ஊன், உள்ளம், உணர்வு, உயிர் எல்லாவற்றையும் குளிர்விக்கும்.

மலருக்கு மணம் இன்றியமையாததுபோல் வாழ்வுக்கு ஒழுக்கம் இன்றியமையாததுபோல் பேச்சுக்கு அன்பும் இன்றியமையாதது. ஆகவே பகைவனிடத்தும் அன்பாகப் பேசுதல் வேண்டும். முதல் நாள் போரில் ஸ்ரீராமர் இராவணனிடம் பேசிய பேச்சு இன்னும் உன்னுந்தோறும் உள்ளத்தை உருக்குகின்றது அல்லவா. ஆளையா உனக்கமைந்தன மாருதம் அறைந்த பூளையாயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின் வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

நான்காவது:

நிதானமாகப் பேசவேண்டும். வெடு வெடு என்றும். வேகமாகவும், விமான வேகத்திலும் பேசுதல் கூடாது பேச்சில் அமைதியிருக்கவேண்டும். உணவு உண்ணும் போது அவசரம் அவசரமாக விழுங்கக் கூடாது. இறைவனுக்கு மலர் வேகமாக அர்ச்சிக்கக்கூடாது. அதுபோல மெல்ல நிதானமாகப் பேசி கேட்பார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்பமொழிதல் வேண்டும். இப்படிப் பேசும் பெருமையுடையவர் தருமர் என உணர்க. இதனை நாவடக்கம் என்பவர் திருவள்ளுவர்.

எல்லாம் உணர்ந்தும் வியா
தன் இயம்பிய வச்
சொல்லாலே நாவயர்ந்தான்
சோமமேசா - வல்லமையால்
மாகாவாராயினும்நா காக்க
காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்
பட்டு"

- சோமேசர் முது
மொழிவெண்பா

அடக்கமின்றி பேசிக்கெட்டவர் பலர். "யாராலே கெட்டான் என்றால் நாவாலேகெட்டான்' என்று தெலுங்கிலே ஒரு பழமொழி.

இராசசூயம் என்ற வேள்வி முடிவடைந்தபின் துரியோதனன் தனது துணைவர்களுடன் தருமருடைய அழகிய சபா மண்டபத்துக்கு வந்தான். குளமில்லாத இடத்தைக்குளம் என்றும், குளமுள்ள இடத்தைக் குளமில்லாத இடமென்றும் கருதி ஆடையைத் தூக்கியும் குளத்தில் வீழ்ந்தும் இடர்ப்பட்டான். அப்போது திரௌபதி "இவன் தந்தைக்குத்தான் விழியில்லையே! இவனுக்கும் விழியில்லையோ?" என்று அவையில் நாவடக்கமின்றிச் சொன்னாள் அதன் விளைவு தான் பாரதத்தில் திரௌபதியும் பாண்டவரும் இடர்ப்பட்டது. ஆகவே சொல்லை அளந்து பேசவேண்டும். பிறர்மனம் நோகுமாறு படபடப்பாகப் பேசுதல் ஒருபோதும் கூடாது.

ஐந்தாவது:

இனிமையாகப் பேசுக, பேச்சுக்கு உயிர்நாடி இனிமை. இனியவை கூறல் என்று ஒரு அதிகாரமே வகுத்தார் திருவள்ளுவர். பணிவும் இன்சொல்லுமே ஒருவனுக்குச் சிறந்த ஆபரணம். இவையன்றிவேறு அணிகலன்கள் இல்லை என்றார்.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கணியல்ல மற்றுப் பிற"

உலகத்தை எல்லாம் வசப்படுத்தும் உபாயம் இன்சொல் என்று கண்ணபிரான் கூறுகின்றார்.

ஆறாவது;

ஆழமுடையதாகச் சிந்தித்துப்பேசுக. பேச்சில் ஆழம் இருக்கவேண்டும் அது சிந்தித்துப்பேசும் பேச்சில் சித்திக்கும்.

ஏழாவது:

சமயறிந்து பேசுக. சமய சந்தர்ப்பம் அறிந்து பேசுவது சமக்கு மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும்

ஒருவன் மகிழ்ச்சியாக இருக்கும் போதும் நமது தயவை நாடும்போதும் பேசிப்பயன் பெறவேண்டும்

குழம்பு - ரசம் பக்குவத்தில் தாளிதம் புரிவது போல் நேரம் அறிந்து பேசுவோர் சாரம் பெறுவர்:

எட்டாவது:

அவையறிந்து பேசு,

"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்'

- திருக்குறள்

அவையறிந்து கூறும் திறம் விரிவுரையாளர்கட்கு மிக மிக இன்றியமையாதது எனவ அறிந்தாலும் அவை அறிதல் வேண்டும். அவை அறியாது பேசும் பேச்சு, நோயறியாது கொடுக்கும் மருந்து போல தீமை பயக்கும். ஆதலால் அவையறிந்து பயனுடைய சொற்களால் விளக்கமாகவும் சுருக்கமாகவும், உருக்கமாகவும் பேசவேண்டும்.

எனவே உண்மையாகவும், நன்மையாகவும், அன்பாகவும் நிதானமாகவும், இனிமையாகவும், ஆழமாகவும் சமயமறிந்தும், சபையறிந்தும் பேசுக. முடிவில் பேசாமல் இருந்தும் பழகவேண்டும்.

ஆசா நிகளந்துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே

- கந்தரநுபூதி

## துர்க்கையே ஆண்டருள்!

அன்னை துர்க்கை அம்பிகையே
உன்னை வாழ்த்திப் பாடுகின்றேன்
முன்னை வினைகள் அறுத்தே நீ
என்னை ஆண்டருள் செய்வாயே!

தாழை யம்பதி மாதாவே
வேளை வந்து தொழுகின்றேன்
தாளைப் பணிந்து ஏத்துகின்றேன்
ஏழை எனக்கருள் செய்வாயே.

பல்கலை நாயகி உறைபதியே
கல்வயல் எனும்பதி ஒருகரையில்
மட்டின்றித் தேன்தமிழ் பாயும்
மட்டுவில் என்பது மறுகரையில்.

செந்நெல் விளையும் விழைவேலி
செழுமா மருதின் குளிர்நிழலும்
வாழை தென்னை வான்கமுகும்
வளமாய்ப் பொலியும் உன்பதியில்.

கூவும் குயிலின் மாஞ்சோலை
தாவும் மந்திகள் கும்மாளம்
யாவும் கண்டு களித்தன்பர்
பாவில் போற்றிப் பாடுகின்றார்.

துர்க்கை அம்பிகை மாதவே
நிர்க்கதி யுற்றோர்க் கருள்வாயே
வர்க்க பேதங்கள் களைந்தகற்றி
சொர்க்க போகங்கள் தருவாயே.

தென்மட்டுவில்
சி. சதாசிவம்

● சாவகச்சேரி தாளையம்பதி அருள்மிகு துர்க்கையம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா ஆரம்பமாகியுள்ளது. உற்சவம் இன்று நிறைவுபெறும்.

## பாசம்

பாடைக்கு நூறு...
பறைமேளம் இருநூறு...
பீடா பீடி சிகரெட்
செலவுகளே ஐந்நூறு...
இன்னும்பல செலவுகளோ...
பத்து நூறு...
ஐயோ...
ஐயாவின் ஆவி
பிரிந்த இடமோ...
வயோதிபர் மடம்!

—குமார் தனபால்

## பண்டிதமணியே, நீவாழ்க!

பைந்தமிழ்ப் புலவோய்
வாழ்க
பாவலர் கவியே வாழ்க
செந்தமிழ்ச் செல்வ வாழ்க
சேமமாய் என்றும் வாழ்க
நந்தமிழ்த் தலைவா வாழ்க
நற்றமிழ்ச் சேயே வாழ்க
எந்தமிழ் ஏந்தால் வாழ்க
ஏற்றமுட னென்றும்
வாழ்கவே.

பண்டித மணியே வாழ்க
பாவலர் துணையே வாழ்க
எண்டிசை போற்றும் நல்ல
ஏந்தலே வாழ்க வாழ்க
மண்டிய தமிழின் இன்பம்
மற்றவர்க் களித்தாய்
வாழ்க
அண்டினர்க் கபயம் நல்கும்
அண்ணலே வாழ்க
வாழ்கவே.

பற்பலர் போற்றும் நல்ல
பண்டித மணியே வாழ்க
கற்றவர் ஏற்றும் நல்ல
கணபதிப் பிள்ளாய் வாழ்க
நற்றவர் விரும்பும் நல்ல
நற்றமிழ்ச் சுவையே வாழ்க
உற்றவர் எல்லாம்
போற்றும்
ஊருணி ஊற்றே வாழ்க

முருகவே. பரமநாதன்

## நலமான இழப்புக்கள்

ஒருகுடும்ப நலனுக்காய் ஓர்ஆளை இழத்தல்,
ஓர்ஊரின் நலனுக்காய் ஒருகுடும்பத்தை இழத்தல்,
ஒருநாட்டின் நலனுக்காய் ஓர்ஊரை இழத்தல்,
உலகத்தின் நலனுக்காய் ஒருநாட்டை இழத்தல்,
உயர்மறுமை நலனுக்காய் இவ்வுலகை இழத்தல்;
இவைஎல்லாம் இழப்பல்ல உய்வதற்கு வழிகள்.

— அல்லை. க. வ. ஆறுமுகம்

★ இது ஒரு வடமொழி ஸ்லோகத்தின் தமிழ். நேருஜியின் உலக வரலாற்று நூலின் தமிழ் மொழிபெயர்ப்பில் கண்டது.

# தமிழுலகிற்கு தங்கத்தாத்தாவை அறிமுகஞ்செய்தவர் பண்டிதமணி ஐயா

★ இரசிகமணி கனக. செந்திநாதன்

## தவப்பேறு

கவிதையாகிய நாயகி, இலக்கணப் பண்டிதர்களிடம் சேராமல், உரையாசிரியர்களிடம் உறவாடாமல் இரசிகர்களையே பெரிதும் விரும்புகிறாள் என்னும் கருத்துப்பட வடமொழியிலே ஒரு சுலோகம் இருக்கிறது. வெறும் இரசனை மட்டும் போதாது தான் இரசித்தவற்றை அப்படியே சொல்லக் கூடியவனாகவும் இருந்து விட்டால் அக்கவிதை பெற்ற பேறு-கவிஞன் பெற்ற பேறு-அளவிட முடியாததாகி விடும். தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் அவர்களுக்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அத்தகைய தொண்டைச் செய்து தானும் உயர்ந்து புலவர் அவர்களையும் உயர்த்தியிருக்கிறார்கள் தமிழ் நாட்டில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களுக்கு இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் வாய்த்தது போல ஈழத்தில் தங்கத்தாத்தா அவர்களுக்குப் பண்டிதமணி வந்து வாய்த்தார் இந்த வாய்ப்பு-இந்தச் சம்பந்தம்-இந்தச் சேர்க்கை ஈழத்துத் தமிழ்மக்கள் செய்த தவப்பேறு என்றே நான் கருதுகிறேன். என்னுடைய இந்த முடிவைச் சிலர் எள்ளி நகையாடலாம். கம்பனுக்குப் பிறகு கவிஞர்களே இல்லை என்போரும், உரையாசிரியர்கள் அருளிப் போந்ததையே கவிதை விமர்சனம் என்று கட்டி அழுபவர்களும் இருக்கிறார்கள் அவர்கள் நிச்சயம் சிரிப்பார்கள். ஷெல்லி, கீட்ஸ், விட்மன், தாகூர் என்று சதா பிற நாட்டுக் கவிஞர்களைப் பற்றியும் அவர்களுக்கு எழுதிய விமர்சனங்களைப் பற்றியும் 'கிளிப்பிள்ளைப் பாடம்' ஒப்பித்து தங்களால் ஈழநாட்டில் ஒரு கவிஞர்க்கும் பிரயோசனம் ஏற்படாத 'எல்லாம் தெரிந்த' விமர்சகர்களும் சிரிக்கலாம்! இந்த இரு வகைப் பண்டிதர்களாலும் கவிதாரசனை வளரப் போவதில்லை கவிஞர்கள் மதிப்புப் பெறப்போவதில்லை.

பண்டிதமணியவர்கள் எப்படிப்பட்டவர்வர்களிடம் எந்த முறையில் படித்தவர்கள், புலவர் அவர்களை எப்படி இனங் கண்டு கொண்டார் என்று காண்பதே இரசனைக்குரிய விடயமாகும். பண்டிதமணி கி. க. அவர்கள் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன், அந்தாதி. யமகம், புராணம் என்ற வகையில் உள்ள நூல்களைக் கடுமையான இலக்கண 'இரும்புக்கடலை'களை குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் 'இரு என இருந்து சொல் எனச் சொல்லி பருகுவனன்ன ஆர்வத்தனாகி' முறையாகப் படித்தவர். அவரைப்போலப் படித்த பண்டிதர்களும், வித்துவான்களும் பாரதி பாட்டையே தொட்டுக் கூடப் பார்க்காதபோது, பார்த்தாலும் பழைய உரையாசிரியர் நடையில் விமர்சிக்கும் போது பண்டிதமணி ஆடிப்பிறப்பையும், கத்தரிவெருளியையும் இரசித்தாரே, பாட்டைச் சாதாரண மக்களையும் சிறுவரையும் இரசிக்க வைத்தாரே, இது தவப்பேறு அல்லாமல் வேறென்ன?

புலவர் அவர்களோ ஆசிரியத்தொழிலோடு, முருகனையும் நாமகளையும் பாடிக் கொண்டு குணத்தில் தங்கமாய் 'தனுண்டு தன்பாடுண்டு' என்று ஒதுங்கி வாழ்ந்தவர். அவர் தமக்கு 'புலமையுண்டு-பாடல் வரும்' என்றே அறியாதவர். அடக்கமாக வாழ்ந்தவர். இந்த அடக்கத்தை, பண்டிதமணி குருவாகிய குமாரசுவாமிப்புலவர் அவர்களியற்றிய இராமோதந்தம். மேகதூதக்காரிகை, சாணக்கிய நீதிவெண்பா இவற்றிற்காகச் செலவிட்டு உயர்த்தியிருக்கலாம் ஆனால் அவர் குமாரசுவாமிப்புலவர் அவர்களுடைய துணிவு, படாடோபத்தைக் கண்டு அஞ்சாமை, நடுவு நிலைமை, கல்வி, ஆற்றல் கண்டனத்திறமை ஆகியவற்றை மெச்சி அவரை 'ஒரு மனிதர்' என்று மெச்சினார். தங்கத்தாத்தா அவர்களை 'ஆடிப்பிறப்பொடு கத்தரித் தோட்டமும் ஆக்கி அளித்த அவர்களே ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் "தாம் ஒரு கவிதா சாமர்த்தியம் படைத்தவர். அந்தச் சம்பத்துப்பிறப்பிலே தமக்குலபித்தது என்பதை வெகுகாலம் அவர் அறியார். இதுதான் அவர்விட்ட பெரியபிழை. இப்படிப் பிழைவிட்ட கிளர் யாழ்ப்பாணத்தில் உளர். அவர்களில் ஒருவர் மகாலிங்கசிவம். புலவரும் சிவமும் தங்கள் சம்பத்தின் பெருமையை அறியாதவர்கள்."

இதைக் கூர்ந்து நோக்கி, நுணித்தறிந்து ஈழத்து இலக்கிய உலகம் பெருமைப்படச் செய்தவர் பண்டிதமணி. இது தவப் பேறல்லாமல் வேறென்ன?

பண்டிதமணியவர்கள் தன்னுடைய பேச்சாற்றலை, விமர்சனத் திறமையை தம்முடைய புலவர் பிரான்' என்று வாழ்த்தினர். இதை ஈழத்து விமர்சகர்களிற் சிலர் உணரவேண்டும்.

## பரிசும் பாராட்டும்

பண்டிதமணியவர்கள் 'தங்கத்தாத்தா' அவர்களைத் தன் பேச்சாலும், விமர்சனத்தாலும் எப்படிச் சிறப்பித்தார் என்பதைப் பார்ப்போம்.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தைத் தூண்டி, முப்பது வருடங்களுக்கு முன் அக்காலத்து வடபெரும்பாக வித்தியாதரிசகராக இருந்த கே. எஸ். அருணந்தியவர்கள் ஒரு அருமையான தொண்டைச் செய்தார்கள். பாடசாலைக் குழந்தைகள் பாடக்கூடிய பாடல்களை இயற்றுவோருக்குப் பரிசு என ஒரு போட்டியை ஏற்படுத்தினார்கள். நமது புலவர் அவர்களும் அப்போட்டியில் எப்படியோ கலந்து கொண்டார்கள். போட்டியின் நடுவர்களாக இருந்தவர்களில் பண்டிதமணியும் ஒருவர். புலவர் அவர்களது ஆடிப்பிறப்பையும், கத்தரி வெருளியையும் கண்டார். அவைகளை மாத்திரம் சிபார்சு செய்து விட்டு இருந்துவிட்டார்.

பண்டிதமணியவர்கள் இதோடு நிற்கவில்லை. புலவர் அவர்களைச் சன்மானிக்க நடந்த கூட்டத்திலே, அவர் முன்னிலையிலே ஆடிப்பிறப்பையும், கத்தரிவெருளியையும் விமர்சனம் செய்து ஈழநாட்டுப் புலவர்களாகிய சின்னத்தம்பிப்புலவர், முத்துக்குமார கவிராயர், சேனாதிராய முதலியார் ஆகியோரது வரிசையிலே தங்கத் தாத்தாவையும் ஏற்றி வைத்தார். புலவரவர்கள் பண்டிதமணியை "வண்டமிழ்தமறி பண்டிதமணியே வாழியவாழியவே" எனவாழ்த்தினார்கள். அப்போதுதான் ஈழத்து இலக்கியஉலகம் 'கவிஞரக்காண ஒருகவிஞர் இருக்கிறார்' எனப் புளகாங்கிதம் அடைந்தது.

## அகில உலக சென் ஜோன் முதலுதவிப்படை 5–ஆவது ஆண்டு நிறைவு மலர்

"யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, அகில உலக சென் ஜோன் முதலுதவிப் படை" -தனது ஐந்தாவது ஆண்டு நிறைவு மலர் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

'எதிர் பாராத விபத்து நேர்ந்தவுடன் எமக்கு உதவவென ஏற்பட்டது முதலுதவியாகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் கல்வியாளர்கள் எங்கள் பாடசாலைச் சிறுவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையிற் பயிற்சி அளித்து வந்தனர்' என மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ம.சிமியாம்பிள்ளை அவர்கள்கூறுவது, முதலுதவிச்சிகிச்சையின் கல்வி வாழ்க்கை முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

மாணவர் வாழ்க்கை எப்போதுமே வீர, தீர விளையாட்டுக்கள் நிறைந்த தொன்றாகவே விளங்குகின்றது. வீரமும் விவேகமும் போட்டி போடும் வாழ்க்கையில் விபத்துக்களும் காயங்களும்சர்வசாதாரனமானவை. எனவே ஆபத்துக்களை எதிர் நோக்குவதோடு அதற்கான பரிகாரங்களையும் மாணவ உலகு அனுபவரீதியாகக் கற்றுணர்ந்திருப்பது மிகமிக அத்தியாவசியமாகும்.

பல விபரீத முடிவுகளைக் கொண்ட விபத்துக்களை நோக்கும்போது, சரியான முதலுதவிச்சிகிச்சைக்குப் இப்படியிராமையே காரணம் எனத் தெரிகிறது. மாணவ நிலையில் கற்றறியும் முதலுதவிச் சிகிச்சை முறைகள், சமுதாய ரீதியாக அதிக பயனை நல்குவன. அது மட்டுமின்றி வீடுகளில் ஏற்படுகின்ற தீவிபத்து, நீர்விபத்து, வெட்டுக்காயங்கள் என்பவற்றிற்கு சரியான, முறையான முதலுதவி கிட்டா விட்டால் விபரீத விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்ற அபாயமும் நேரிடலாம். எனவே கல்வியின் பன்முகப்பயன்களில் முதலுதவிச் சிகிச்சை சிறப்பிடம் வகிப்பதை தாம் அனுபவவாயிலாக அறிந்து கொண்டோம்.

அகில உலக சென் ஜோன் முதலுதவிப் படை கொண்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் கோயில் திருவிழாக் காலங்களிலும், நாட்டின் பதற்றக் காலங்களிலும், அகதிகள் முகாம்களிலும் ஆற்றிவரும் தொண்டு சமூக கவனத்தை அதிகம் ஈர்த்துள்ளது.

எனவே, சமூகப் பொறுப்பும் கடமையுணர்வும் கொண்ட மாணவர்களால் உருவாக்கப்பட்ட நூல்-வெறும் விழா மலராக - விளம்பர மலராக மட்டுமிராது பயனுள்ள பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. இக்கட்டுரைகள் புதிதாக இப்படையில் சேர விரும்பும் மாணவர்களுக்கு உதவுவதோடு, பொதுவாக எல்லாமக்களுக்கும் பயன் தருவனவாக விளங்குகின்றன.

என்புமுறிவுகளும் முதலுதவிகளும்; குருதிப்பெருக்கும் முதலுதவியும்; நஞ்சூட்டலும் அதற்கான முதலுதவி முறைகளும்; சுவாசம் பாதிக்கப்படலும் செயற்கைச் சுவாசமும்; போன்ற கட்டுரைகள் கவனத்தை ஈர்ப்பன

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட டாக்டர் ந. சிவராஜா அவர்களின் சிறுகாயங்களும் முதல்உதவியும் என்ற கட்டுரை எல்லாவற்றிற்கும் சிகரமாக விளங்குகிறது.

## புதிய புத்தகம்

(11-ம் பக்கம் பார்க்க)

## செவ்வாயில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரர்கள் "சூழற்சி முறை ஈர்ப்பு விசை"க்கு பழக்கப் பட்டிருப்பார்கள். இரண்டாவது, அவர்களது உணவு முறை புவி வாழ் மக்களின் உணவு முறையிலிருந்து பெருமளவு மாறுபட்டிருக்கும். மூன்றாவது, விண்கலங்களை புவியின் மேற்பரப்பிலிருந்து விண் வெளிக்குச் செலுத்துவதற்கு அதிகளவு விசை தேவை. ஆனால் "குடியிருப்புக்களிலிருந்து" விண்கலன்களை செலுத்து வதற்கு மிகக் குறைந்த விசையே தேவைப்படும். இத்தகைய காரணங்களால் "விண்வெளி குடியிருப்புக்களை" அமைப்பது அத்தியாவசியமாகின்றது. தற்போதைய மனிதனின் தொழில் நுட்ப அறிவு சுமார் 10 000 பேரைக் கொள்ளக் கூடிய "குடியிருப்புக்களை" அமைப்பதற்கு போதுமானது என்று அமெரிக்க விஞ்ஞானி ஜெரால்ட் ஓநீல் எனபவர் தெரிவித்துள்ளார்

எனினும்; தற்போது இவ்வாறான குடியிருப்புக்களை அமைப்பதில் தடையாகவுள்ளவை அரசியல், பொருளாதார காரணிகளே யன்றி தொழில் நுட்ப காரணிகள் அல்ல வல்லரசுகளினதும், தொழில் நுட்ப அறிவி கூடிய நாடுகளினதும் கூட்டு முயற்சியின்மை, பெருந் தொகையான பணம் ஆயுத உற்பத்தியிலும் போரிலும் செலவிடப்படல், விண்வெளி தொழில் நுட்ப அறிவை அரசியல் வாதிகள் போர் முறைகளில் பயன்படுத்தல், விண்வெளி பயணம் பற்றி சிலர் கொண்டுள்ள அதிருப்தி போன்றவையே இன்றைய விண்வெளி ஆய்வுகளை பின்தள்ளச் செய்கின்றனவே யன்றி தொழில்நுட்ப காரணிகளல்ல.

இத்தகைய அரசியல், பொருளாதார காரணிகளை நீக்கி முழுமனித இனமும் கூட்டு முயற்சியுடனும் செயற்பட்டால் செவ்வாயில் காலடி வைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

## மறதி

மனங்களில் தோன்றிடும்
துன்பம் துயர்களைக்
களைந்து வாழ்ந்திட
மக்களின் துணைநீ!

உன்துணை இல்லையேல்
துன்பம் துயர்களால்
என்றுமே மக்களின்
நெஞ்சம் கலங்குமே!!

கடன் பெற்றவர்களின்
மனத்தில்நீ இருப்பதால்
கடன் கொடுத்தவர்கள்
கண்ணீர் பொழிகிறார்!

நன்மைகள் பெற்றவர்
நெஞ்சிலேன் இருக்கிறாய்?
துன்பங்கள் செய்தவர்
நெஞ்சிலேன் நிறைகிறாய்??

பயணத்தில் சிலருடன்
பயணநீ செய்வதேன்?
பயணப்பை பணமெலாம்
இழந்தவர் தவிக்கவோ??

மாணவர் கல்வியில்
மேன்மை பெற்றிட
மாணவர் உளங்களில்
இருப்பதைத் தவிர்த்திடு!

விரும்பாத எவருக்கும்
விரும்பாத உதவியை
விருப்புடன் தவிர்த்திட
அரும்பெரும் துணைநீ!

அனைவரின் நெஞ்சிலும்
நீகுடி இருப்பதால்
நினைவுநாள் விழாக்களை
மக்கள் மதிக்கிறார்!

—"முருகு"

## நேருகண்ட யாழ்ப்பாணத்துச் சிறுவன்

"...இலங்கையையும் இலங்கை மக்களையும் பற்றியநினைவுகள் பல தோன்றுகின்றன. ஒரு நாள் ஒரு யுகமாகத் தோன்றும் சிறையிலே, அந்த நினைவுகள் உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கின்றன சிறு சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. யாழ்ப்பாணத்துக்கு அருகில் என்று நினைக்கிறேன். பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் எங்கள் காரை நிறுத்தி வரவேற்றார்கள். சிறுவர்களின் முகத்தில் ஆர்வமும் ஆவலும் ததும்பின. அவர்களில் ஒருவன் ஓடி வந்து என் கைகளைக் குலுக்கி, நான் ஒன்றும் கேட்காமாலயே, தானாகவே, "நான் ஒருக்காலும் தளர்ச்சியடைய மாட்டேன்" என்றான். அவனுடைய தளிர் முகமும் உறுதி நிறைந்த பார்வையுடன் ஒளி வீசிய கண்களும் என் மனத்திரையில் நன்றாகப் பதிந்து விட்டன, அச் சிறுவன் யார் என்று எனக்குத் தெரியாது. அவனை நான் மீண்டும் காணவில்லை, எனினும் அவன் தன் சொல்லைக் காப்பாற்றுவான். வாழ்க்கைத் துன்பங்களைக் கண்டு தளர்ச்சியடைய மாட்டான் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது."

சுயசரிதையில்
ஆசியஜோதி நேரு

## நீறுபூத்த

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப் படுவார்கள் எனவும் இவர்கள் தெரிவித்தனர். தெரிவு செய்யப் படுவோருக்கு தீயணைப்பு சம்பந்தமாக அனைத்து பயிற்சிகளும் வழங்கப்படும். தீவிபத்து ஏற்பட்ட இடத்திற்கு விரைதல், துரிதகதியில் தீ அணைப்பில் ஈடுபடல் ஈடுபடல், கட்டிடத்துள் பிரவேசித்து தீயில் சிக்குண்டோரை மீட்டுவரல் போன்ற பல விடயங்களில் பயிற்சிவழங்கப்படவுள்ளது. இதற்கெனப் பலர் தொண்டர்களாகவும் சேர வாய்ப்புஉண்டு இவ்வாறு அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு, கண்டி ஆகிய இடங்களுக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணத்திலேயே தீயணைக்கும் சேவை ஆரம்பிக்கப்படுவது இந்தவிடயத்திலுள்ள முக்கிய அம்சமெனலாம்.

## உயர்ந்த மனிதர்

நாட்டுறவு...
வீட்டுறவு...
கூட்டுறவு...
இன்னும் பல
உறவு முறைகளை
அந்த ஊரில்
கட்டிக் காக்கும்
கனத்த மனிதர்
தன் மனைவிமக்கள்
என்ற உறவு முறைக்கு
கட்டுகிறார் ஜீவனும்சம்!

—குமார் தனபர்ல்

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
From; 3-7-85
Daily 10-30, 2-30, 4-30 p m.
**"SPLASH"**
(color)
"Paradise" - "Blue Lagoon"
படங்களைவிட மிகச் சிறந்த படம்
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**மேபெயர் மினி**
(கன்னாதிட்டி)
பொல்லாத போக்கிரி
சிரஞ்சீவி (10-30 a m.)

2 30 p m
WHERE EAGLES DARE
(War Flim)
தென்றலே என்னைத் தொடு
மோகன்—ஜெயஸ்ரீ
5-30 p m

**நியூசாந்தி (மினி)**
(யாழ். சாந்தி சினிமாவில்)
தினசரி 10-30, 2-15, 4-45
**"The First Turn On"**
(Adults only)
அநேக ரசிகர்கள் விருப்புக்கிணங்க தொடர்ந்து காண்பிக்கப்படுகிறது!

**லிபேர்ட்டி மினி**
(வெலிங்டன் சந்தி அருகாமை)
தினசரி 10-30, 2-30, 5-00
(3 காட்சி)
ரஜனிகாந்தின்
**Andho Kanoon**
அந்தோ கானூன்
(ஹிந்தி)
பாடல்கள், நடனம், பயங்கர சண்டைக்காட்சிகள் நிறைந்த படம்.

**ஸ்ரான்லி மினி 'A'**
10-30, 2-30
கமல் - ஊர்வசி
**அந்த ஒரு நிமிடம்**

**ஸ்ரான்லி மினி 'B'**
10-30, 2-30
ஹீநாத், நளினி
கவுண்டமணி
**கள் வடியும் பூக்கள்**

**பவித்ரா மினி**
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துமகளிர் கல்லூரியடி)
10-30, 2-30, 4-30, 6-30
**Blue Lagoon**

**தேவி மினி**
சினிமா
(வின்ஸர் அருகாமை)
6-7-85 தொடக்கம்
"Alice Good Body"
(color) Adults only

**S T L மினிசினிமா**
(திருநெல்வேலி)
காட்சி 10-30 1-30
அமிதாபச்சன் - ஹேமமாலினி தர்மேந்திரா
**"சோலே"**
(ஹிந்தி)

"BLOODY MOON"
(Horror Film)
வயது வந்தவர்களுக்கு மட்டும்
9-00 — 4-30

**பெயர் மாற்றம்**

கொக்குவில் மேற்கில் வசிக்கும் செல்லையா நடராசா சந்திரமோகின ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயர் சிறிரஜனி என்று வழங்கி வரும் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறன்.

4250

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-30
விஜயகாந்தன்
ஜெயமாலினி-அநுராதா
**இது எங்கள் பூமி**

**வின்ஸர்**
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30
**GANDHI**
காந்தி அடிகள்
மகாத்மாகாந்தி அடிகளின் உண்மையான சுதந்திரம் மக்களின் பிறப்புரிமை வீரசுதந்திரம் வேண்டி நின்ற இந்திய மக்களை அறத்தில அன்பின் சாத்வீகப் போராட்டத்திலே-வழிநடத்திவெற்றிகண்ட காந்தி மகானின் வாழ்க்கைவரலாற்றை சித்தரிக்கும் உன்னத திரைக்காவியத்தை பார்த்து மகிழுங்கள்.
இன்னும் சிலதினங்கள் மட்டும்காண்பிக்கப்படும்.

**உஷா மினி**
(கே கே எஸ் வீதியில் முட்டாசுக்கடை சந்திக்கும் வை சி சி. கு. கடை சந்திக்கும் மத்தியில்)
தினசரி 10-30, 2-15
மோகன் — ஜெயஸ்ரீ
நடித்த ஸ்ரீதரின்
**தென்றலே என்னைத் தொடு**
4-45 மட்டும்
BRUCE LEE FIGHTS BACK FROM THE GRAVE

**வெலிங்டன்**
10-30 — 2-15 — 4-15
**Midnight Express**
(திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்தது)

**லிடோ** சினிமா
10-30 2-30
10ந் திகதி முதல்
**நீங்கள் கேட்டவை**

**குமரன்** மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30
மோகன் ஜெயஸ்ரீ நடித்த ஸ்ரீதரின்
**தென்றலே என்னைத்தொடு**

**மொடேர்ண்**
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சகவேலை ராஜா தியேட்டருக்கு அருகாமை)
பெருப்பிக்கப்பட்ட திரையில் 5'x5' மிகத் தெளிவாகக் காண்பிக்கப் படுகிறது
காலை 10-30 காட்சிமட்டும்
**படகோட்டி**
இரவு காட்சிகள்
INTIMATE MOMENTS

**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்**
**கோண்டாவில் முகவர் நிலையம்**
(இ. போ. ச கோண்டாவில் சாலைக்கு எதிராக)
**குத்தி மரங்கள் மலிவு விற்பனை**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கோண்டாவில் முகவர் நிலையத்தில் [இ. போ. ச. சாலைக்கு எதிராக] இம் மாதம் 10ம் திகதி புதன் கிழமை தொடக்கம் கீழ்க்காணும் குத்தி மரங்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உள்ளன.

முதிரை
பாலை
யாவறணை
தேக்கு

பாவனையாளர்கள் தங்கள் தேவைகட்கு கோண்டாவில் களஞ்சியப் பொறுப்பதிகாரியை கந்தோர் நேரங்களில் சந்தித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

க. நாகராசா
பிரதேச முகாமையாளர்,
வடபிராந்தியம்.

அரசாங்க மரக்
கூட்டுத்தாபனம்,
25, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். 4285

**அறிவித்தல்**

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் (கொடிகாமம்) 4000க்கு மேலான வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். 20-07-85 திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு,
ப நோ. கூ. சங்கம்,
கொடிகாமம், 05-07-1985.
4287

## London O' and A' Level Examinations

Efficient coaching in Science subjects for London Ordinary and Advanced Level Examination. June, 1986 commences in August 1985 at Madras Christian College Senior School, Madras 31, organised by The International Institute of Youth Development Seats reservation with Dr N Kanagasuriar, 74, Harrington Road, Madras. 600 031 before July ends. 4211

## வேண்டுகோள்

என்னிடமிருந்து எடுத்துச்சென்ற C 90 83 ஸ்ரீ 5106 ஹொண்டா மோட்டார் சயிக்கிளைத் தயது செய்து திருப்பித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறேன். இவ் விடுதலைகோரிப் பாடுபடும் சகல தூய உள்ளங்களினதும் கண்ணோட்டத்துக்கு இதனைச் சமர்ப்பிக்கிறேன்

வளாக ஒழுங்கை, ச. புவனசுந்தரம்.
திருநெல்வேலி. 4267

## நன்றி நவிலல்



ஆண்டவன் படைப்பு:
22-03-1938

அழிப்பு:
09-06-1985

கடந்த 09-06-1985 ஞாயிற்றுக்கிழமையன்று அகால மரணமான கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் திரு. முத்தையா தர்மகுலசிங்கம் அவர்கள் அராஜகத்தின் விளைவால் கடும் காயமுற்று உயிருக்குப் போராடிய வேளை அவரின் உயிரைக் காப்பதற்கு முன்நின்று உழைத்த கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்களுக்கும் அன்னாரது பூதவுடலை யாழ் வைத்தியசாலையிலிருந்து அவரது இல்லத்திற்குக் கொண்டு சேர்ப்பதில் முன்நின்று உதவியவர்களுக்கும், 13-06-1985ல் நடந்த இறுதிச்சடங்குகளில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் வேறும் பல வகைகளில் உதவிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

32, கைலாயபிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். 4251

# ELEPHANT HOUSE PRODUCTS

**இப்பொழுது எம்மிடம் கிடைக்கின்றன**

ஐஸ் சொக்ஸ், ஐஸ்கிறீம் வகைகள்
SAUSAGES: Beaf, Pork, Porkies,
Swiss Rolls, Cordials, Jams, Sauces

**மாவிட்டபுரத்தில்**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழாக்களின்போது, தெற்கு வீதியில் அமைந்த எமது விசேட விற்பனை நிலையத்துக்கு விஜயம் செய்யுங்கள் இங்கே நீங்கள் பெறக்கூடியவை:

- தரம்மிக்க எலிபன்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகள்
- குடும்பப் பெண்களின் அபிமானத்தைப்பெற்ற ஷோபா உற்பத்திகள்
- உயர்தரமான RAJ BRAND எவர்சில்வர் பாத்திரங்கள்

SHOBA

**ஷோபா ஏஜென்சீஸ் லிமிற்றெட்**
194, காங்கேசன்துறை வீதி சுன்னாகம்.

Dyn. Ads

## 'றெலோ' மறுப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான லொறி கடத்தப்பட்டதற்கும் தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்றுபுரட்சிகர ஈழவிடுதலைச் சமகம் [றெலோ] மறுப்புத் தெரிவித்துள்ளது.

கூட்டுறவுத்துறையை ஆதரிக்கும் நிலைப்பாட்டைத் தாம் தொடர்ந்து பேணிவருவதாகவும் அக்கழகம் அறிவித்துள்ளது. மா

## இன்று

(காரைநகர்)

காரைநகர் பிரம்மஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்களின் பேரனும், பிரம்மஸ்ரீ கா. விஸ்வநாதக் குருக்களின் மகனுமாகிய ஈஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆசாரியாபிஷேக மண்டலாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோவிலில் நடைபெறும்.

## குஜராத் முதல்வர் ராஜினாமா

(புதுடில்லி)

குஜராத் முதல் அமைச்சர் திரு. மாதவசிங் சோலங்கி தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

## ஷண்முகார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று காலை 7-15 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும், 8-30மணிக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், மாலை 4-00 மணிக்கு சந்தனக்காப்புச் சாத்தப்பெற்ற செந்தில்குமரனுக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், 5-00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் சுவாமி உள்வீதி வலம்வருதலும் நடைபெறும்.

## அத்திலாந்திக் சமுத்திரத்தில் கறுப்புப்பெட்டியின் ஒலி? யந்திரமனிதன் சுழியோட்டம்

(லண்டன்)

அத்திலாந்திக் மா கடலில் விபத்துக்குள்ளான எயர் இந்திய விமானத்தின் தகவல் பெட்டியான கறுப்புப்பெட்டி அடங்கிய வால் பகுதி இருக்குமிடத்தை அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட 'ரேயோ' இயந்திர மனிதன் கண்டுபிடிக்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானம் விழுந்த இடத்திலிருந்து 3 2 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு கிலோ மீட்டர் ஆழத்திலிருந்து இலேசான ஒலிக்குறிகள் கேட்பதாகவும் இவை அந்தக் கறுப்புப்பெட்டியிலிருந்து வருவனவையாக இருக்கக்கூடும் என்றும் மீட்புடபணியினர் நம்புகின்றனர்.

குறித்த இடத்தை நோக்கி இயந்திர மனிதன் சுழியோடிக் கொண்டிருக்கிறான். இந்த இயந்திர மனிதன் தன் கைகளை நீட்டிப் பொருளை எடுத்துவரச் செய்வதற்கான கருவி அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தாய்க்கப்பலின் மாலுமி தொலைக்காட்சிக் கமராவின் உதவியுடன் இயந்திரமனிதனை இயக்கிக்கொண்டிருக்கிறார்.

## ஊரடங்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்ட நேரத்தில் மேலும் ஒரு மணித்தியாலம் தளர்த்தப்பட்டுள்ளது.

இரவு 9-00 மணி தொடக்கம் அதிகாலை 4-00 மணிவரையும் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் இரவு 10-00 மணி முதல் அதிகாலை 4-00 மணி வரை அமுல்படுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது (து

## புதிய புத்தகம்...

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

இதழாசிரியர் செல்வன் சண். ஜோண்சன், பிரிவு அத்தியட்சரி தி கமலநாதன். பிரிவு உத்தியோகத்தர் சி. கிருஷ்ணகுமார் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

அச்சமைப்பும், புத்தக ஒழுங்கும் சிறப்பாக உள்ள நூலில் காணப்படும் அச்சுப்பிழைகளைத் தவிர்த்திருக்கலாம்.

-செம்பியன்செல்வன்.

## கடத்தப்பட்டார்

(வவனியா)

வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கடந்தவியாழக்கிழமையன்று பகல் வவனியாஆஸ்பத்திரியில் நஞ்சருந்தியதாக அனுமதிக்கப்பட்டிருந்த தெய்வேந்திரன் (26) என்ற இளைஞர் அன்று இரவே பத்து மணியளவில் 4 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டியால் கடத்திச் செல்லப்பட்டார்.

## இன்று கிரிக்கட் போட்டி

[யாழ்ப்பாணம்]

சென்றலைன்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி இறுதி ஆட்டம் இன்று [ஞாயிறு] யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. [மா]

## விசா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரம்வெளிநாட்டவர்கள் மேற்கு பெர்லினுக்குள் சட்ட விரோதமாகப் புகுந்திருப்பதாகக்கூறப்படுகிறது.

விசா அல்லது பிரயாண தஸ்தாவேஜுகள் இல்லாது கிழக்குபெர்லின்வரும் இலங்கையர்கள் மேற்கு பெர்லினுக்குள் செல்லும் சந்தர்ப்பம் வழங்கப்படாது திருப்பி அனுப்பிவைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (பெ. மா)

## தலைமன்னார்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அச்சேவை இதுவரை நடைபெறவில்லை.

இப்பொழுது அரசாங்கத்துக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுக்குமிடையே பூட்டானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைமுடிவுகளை அடுத்தே இக்கப்பல்சேவையை நடாத்துவதெனமுடிவு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இம்மாதம் 17ம் திகதி தொடக்கம் கொழும்பு-தூத்துக்குடிகப்பல் சேவை நடத்துவதற்கு இருநாடுகளும் இணங்கியிருந்தது தெரிந்ததே. (பெ-மா)

## 36 நாடுகள்...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

வரசு, பிரான்ஸ், ஜப்பான், லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், தாய்லாந்து யூகோஸ்லேவியா, ஸ்பெயின், மாலைதீவு பாஹ்ரெயின், குவைத், ஓமான், கட்டார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகளுக்கே விஸ இன்றி இலங்கை வர அனுமதிக்கப்பட்டுள்ளது.

83 ஜுலைக் கலவரத்துக்குப் பின்னர் இலங்கைக்கு உல்லாசப் பிரயாணிகள் வருகை பெருமளவு குறைந்துள்ளதைத்தொடர்ந்து வருமானமும் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. [பெ-மா]

## வட்டுக்கோட்டையில் ஊர்வலம்

[வட்டுக்கோட்டை]

பூட்டானில் நடைபெறும் பேச்சு வார்த்தையைக் கண்டித்து வட்டுக்கோட்டைத் தொகுதியில் பெருமளவிலான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது

பொது மக்களும், மாணவர்களும் உட்படச்சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

காலை எட்டு மணிக்கு அராலி தெற்கில் ஆரம்பமான ஊர்வலம் மாதகல், சுழிபுரம், சண்டிலிப்பாய் ஊடாகசித்தங்கேணியை அடைந்து அங்கிருந்து பண்டத்தரிப்பு, சுன்னாகம், சங்கானை போன்ற இடங்களையடைந்து சுழிபுரத்தில் பி.பகல் 3-00 மணியளவில் முடிவுற்றது.

இவ் ஊர்வலம் சென்ற வீதிகளில் எல்லாம் ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்களுக்குத் தாக சாந்தி வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பெருமளவிலான சுலோக அட்டைகளைத் தாங்கிச்சென்ற இவ் ஊர்வலத்தில் ''பூர்வீக உரிமையதை பூட்டானில் கேட்பது மடமை'' ''தமிழீழமே எங்கள் மூச்சு, அதற்கில்லை மறுபேச்சு'' ''பூட்டான்பேச்சு, பொழுது விடிஞ்சால்போச்சு'' என்ற சுலோகங்கள் கோஷிக்கப்பட்டன. (து)

## தமிழீழ ராணுவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை- இனத் துரோகிகளை- சந்தர்ப்பவாதிகளை இனம்காணுங்கள்' என்ற தலைப்பிலான பிரசுரம் ஒன்றை தம்பிப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான 'தமிழ் ஈழ ராணுவம்' இயக்கம் நேற்று வெளியிட்டுள்ளது.

பூட்டானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான பெரிய சுவரொட்டிகள் மேற்படி இயக்கத்தால் யாழ். குடாநாடெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. [மா]

## போர் நிறுத்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திம்பு நகரில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்குமுன் இந்திய அரசு அதிகாரிகளைத் தாம் சந்திக்கப் போவதாகவும் திரு. உமா மகேஸ்வரன் தெரிவித்தார்

மட்டக்களப்புப் பகுதியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இருவர் இராணுவத்தினரால் சுட்டுக்காயப் படுத்தப்பட்டுள்ளனர் என்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு பிரபாகரன் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

பூட்டான் பேச்சுவார்த்தையின் போது போர் நிறுத்தத்தின் வழிமுறைகள் பற்றியே தமது இயக்கங்கள் விவாதிக்கும் என்று மக்கள் புரட்சிகர மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பாலகுமார் தெரிவித்தார்.

### கூட்டணி நேற்று டில்லி சென்றது

இதே சமயம் திம்பு பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நேற்று சென்னையிலிருந்து புதுடில்லி பயணமானார்கள்.

அங்கு இவர்கள் இந்திய அரசு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின்சார்பில்திருவாளர்கள் அ அமிர்தலிங்கம், எம் சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன் ஆகிய மூவரும் இப்பேச்சுக்களில் கலந்து கொள்வார்கள். (து)

## புங்குடுதீவில்

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு வாழ் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடந்த 4-ம்திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இவ் ஊர்வலத்தில் சுலோக அட்டைகளை தாங்கியவண்ணம் பெருங்காடு கந்தசுவாமி கோவிலடியில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் பல இடங்களைச் சுற்றிக் கொண்டு மீண்டும் அதே இடத்தை வந்தடைந்தது.

## உற்சவம்

[வண்ணார்பண்ணை]

வண்ணை கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது இம்மாதம் 20-ம் திகதி [20-7-85] தேர்த் திருவிழாவும், 21-ம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

## பேச்சுவார்த்தை ..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு தமது சொந்தக் கோரிக்கைகளை முன்வைப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்தலைவர் திரு வே. பிரபாகரன், தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் (ரெலோ) திரு. ஸ்ரீசபாரத்தினம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் (ஈ. பி. ஆர். எல். எவ்) திரு பத்மநாப ஈழப்புரட்சி அமைப்பு தலைவர் திரு. பாலகுமார் ஆகியோர் இந்தியப் பிரதி நிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஏற்கெனவே புதுடில்லி சென்றுள்ளனர் இந்த ஒவ்வொரு குழுவுடனும் அரசியல் பேச்சாளரும் சென்றுள்ளனர். (பெ.மா)

உ
சிவமயம்

## முக்கிய அறிவித்தல்

எனது அன்பார்ந்த வடிக்கையாளர்களுக்கு திருமதி. மு. சுப்பிரமணியமாகிய நான் எனது 89-ம் இலக்க 1st X தெரு யாழ்ப்பாணம் லிங்கம்ஸ் என்ற விலாசத்திலுள்ள அடைவுகடையை 85-ம் ஆண்டு ஆடி மாதம் 29-ம் திகதியுடன் மூடிவிடுவதற்கு தீர்மானித்து உள்ளேன். ஆகையால் தயவுசெய்து உங்கள் சிரமத்தைப் பாராது ஆடி 29-ம் திகதிக்கு முன்னதாக உங்கள் சகல அடைவு நகைகளையும் மீட்டு எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
திருமதி மு. சுப்பிரமணியம்.
4-7-85 4259

## தேங்காய் எண்ணெய் விற்பனைக்குண்டு

எம்மிடம் தரமான, சுத்தமான தேங்காய் எண்ணெய், தேங்காய் பிண்ணாக்கு எந்த நேரமும் நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ கிருஷ்ணா இண்டஸ்ரீஸ்,
7, 8, கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி.
தொலைபேசி: 226 4266

## SCIENCE CENTRE KARAVEDDY

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

Gr 11 G C E (A/L) 1987 Aug.
Gr. 12 G C E (A/L) 1986 Aug.
One year course
Gr 10 G C E (O/L) 1985 Dec.
(பகல் நேர வகுப்புக்களும் உண்டு)

ஆரம்பம் 12-07-1985
[விஞ்ஞான பாடங்கள் மட்டும்] 4202

## மரண அறிவித்தல்

### டாக்டர் த. தங்கவேல்

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை டாக்டர் த. தங்கவேல் காலமானார். அன்னார் சிவமலரின் அன்புக்கணவரும், சுகந்தி, சுமதி, இரமணன், பிரணவன் என்பவர்களின் அன்புத் தந்தையும், ச. நாகேந்திரன் (சம்பியா), ச தேவராஜன் (நைஜீரியா), ச நடராஜா (இலங்கை வங்கி, பருத்தித்துறை) என்பவர்களின் மைத்துனரும், முன்னாள் உடுப்பிட்டி பா.உ. த இராசலிங்கம், டாக்டர் க வல்லிபுரம் ஆகியோரின் பெருமகனும், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த த பாலச்சந்திரனின் சகலனும், மட்டக்களப்புப் பொறியியலாளர் த. கிருஷ்ணன், வல்வை சிதம்பராக்கல்லூரி உபஅதிபர் ம ட்டித்தம்பி என்பவர்களின் சகோதரருமாவார். ஈமக்கிரியைகள் 6-7-85 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ச. நடராசா

இரத்தினகிரி,
அல்வாய் தெற்கு,
அல்வாய். 4279

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone, 22389, 24126.